தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-1.

மலர் 2 | சென்னை | 13—3—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 39

ஆசிரியர் கண்ணதாசன்

பாவம்! மனிதர்கள்!

மனித ஜாதிக்கு ஒரு தீராத நோய் பற்றியிருக்கிறது. அது நீங்காத மனப்பேயோ, இறங்காத விஷமோ தெரியவில்லை. வளம் கொஞ்சும் உச்சஸ்தானத்தை—எவராலும் அசைக்கமுடியாத பெரும் பதவியை மனித இதயம் தேடித் தேடி அலைகிறது. எங்கெங்கோ முட்டி மோதிக் கொள்கிறது. எவரெவர் பகை வந்தாலும் ஏற்றுக்கொள்கிறது. ஆசை! பித்து! வெறி!! வீம்பிலேயும் வில்லங்கத்திலேயும் ஊறி உப்பிப்போன மனிதர்கள் நல்லதை நஞ்சு என்பார்கள், நெருப்பை ரத்தினம் என்று வாதிப்பார்கள். ஜன வாக்கு அப்போதுமட்டும் பிணக்காட்டில் முகாமடித்திருக்கும். தன் உள்ளக் கண்களுக்கு ஒற்றைக் கண்ணாடி அணிவித்து உலகின்மீது பார்வை செலுத்தினால், உலகம் தன்மீது 'ஜன விரோதி' என்ற சுடுசொல்லை வீசுமே என்ற அச்சம்—வெட்கம் கூட அந்தச் சதைப்பிண்டத்திற்குத் தட்டுப்படுவதில்லை. நல்ல இடத்தில் உட்கார்ந்துகொள்ள வேண்டும், அசைக்கமுடியாமல் தன்மீது ஒரு ஆணியையும் அறைந்துகொள்ள வேண்டும். கேவலம், இந்த அல்ப ஆசைதான், —'அரசியல் தாசி'க் குணம்தான் தமிழ்நாட்டு அரசியலைத் தலைகுப்புறக் கவிழ்த்துவிட்டது. பெரும் பெரும் ஸ்தாபனங்களெல்லாம் உருக்குலைந்து போனதற்குக் காரணமும் இதுதான். ...னைப் பாசை கொண்ட உள்ளம்தானே நாட்டை நைத்து சாற்றாறு வடித்து வெட்டியாக்கி மகிழ்கின்றது!

அத்தகைய இதயம் — தட்டிக் கொடுப்போரை எட்டி உதைக்கும் மரக்கட்டை இதயம் இந்த நாட்டில் சிலரைப் பிடித்தாட்டிக்கொண்டிருக்கிறது. தனித்து நின்று குரல் எழுப்பினால் தனக்கென ஒரு செல்வாக்குப் பிறக்குமென்று நினைக்கிறார்கள். இந்தக் காலம், அப்பேர்ப்பட்டவர்களுக்குச் சர்க்காரால் தற்காப்புக் கொடுக்கவேண்டிய காலமென்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். அப்பாவிகள்! இல்லை! அவர்களை அப்பாவிகளென்று கூறுவது! நாட்டோரை அப்பாவிகளாக எண்ணிக் கிடக்கும் மேதாவிகள் என்று சொல்வோம். இவர்களில், கனம் பக்த வத்சலம், பிறந்ததிலிருந்தே மேதாவி. கனம் சுப்ரமணியம் இடைக்காலத்து மேதாவி. ஆச்சாரியார் ஆங்கிலேயர் காலத்திலிருந்தே மேதாவியானவர். இந்த மேதாவிகளின் பட்டியலிலே புதிய உறுப்பினராக அல்ல—தனது பழைய உறுப்பினர் பதவியைப் புதுப்பித்கொள்ளும் விதத்தில் 'கல்கி' நடந்து கொண்டிருக்கிறது.

'இட்லர் எங்கள் மாமா!'

தட்சிணப்பிரதேச அமைப்பை நாடெல்லாம், நல்லவர் உள்ளமெலாம் எதிர்த்து வருகின்றன. தென்னாட்டின் எதிர்க் கட்சிகள் அனைத்தும் காரணம் காட்டி பலத்த எதிர்ப்புக் குரல் எழுப்பியிருக்கின்றன. இவ்வளவு பெரிய எதிர்ப்புக்கிடையே, ஆச்சாரியாரால் வளர்க்கப்பட்ட 'அநியாயப் புத்திசாலி' யான 'கல்கி' அபயக்குரல் எழுப்பியிருக்கிறது. தட்சிணப் பிரதேச அமைப்பு, அறிஞர்களின் சிந்தனையில் கனிந்த கனி என்று புலம்பியிருக்கிறது. பாவம்! ஆசைக்கு ஏது வெட்கம்? பிரச்சினைக்குரிய எதிர்ப்பை மறைத்தால் அறியாமை என்று சொல்லி விடலாம்; மக்கள் உள்ளம் அறியாதார் என்று ஒதுக்கி விடலாம். ஆனால் கல்கி மக்களின் எதிர்ப்பை மூடிமறைக்கவில்லை. மக்களின் எதிர்ப்பைத் துச்சமென மதிக்க வேண்டுமென்று, மயில் வாகனத்திலிருக்கும் காமராசருக்குத் தெரிவித்திருக்கிறது. கண்மூடித்தனமாக ஒரு திட்டத்திற்குத் தரும் ஆதரவு இருட்டறைக்கு ஒப்பானது என்று உணர்ந்த கல்கி, உலகுக்கு எடுத்துரைத்த கல்கி, நிர்வாக அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்துவிடக் கூடாது என்று குரல் கம்மக் கத்திக் கத்திப் பலவீனத்திற்குள்ளான உலகப் பெரியாரின் 'அடிச்சுவட்டில் நானும் ஒருவன்' என்று தியாகவாழ்வினரின் பட்டியலில் தன்னைத்தானே சேர்த்துக் கொண்ட கல்கி மனச்சான்றைக் கொன்றுவிட்டு எழுதியிருக்கிறது, 'மக்களுடைய சம்மதம் வேறு, மக்களை நடத்துவது வேறு' என்று.

'பட்டாதார்களுக்கும், மிட்டா மிராசுகளுக்கும்தான் ஒரு காலத்தில் வாக்குரிமை இருந்தது; இப்போது காந்தியார் புண்ணியத்தில் ஏழை எளியவர்களின் எண்ணங்களுக்கும் மதிப்பளிக்கும் பேறு பெறலும். இதோ வாக்குரிமை!" என்று பெருமையடித்துக்கொண்ட காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தியின் செல்லப்பிள்ளைதான் எதேச்சாதிகாரத்திற்கு முன்னுரை எழுதியிருக்கிறது. விலங்கு பூட்டி வீதியிலே இழுத்து வரப்பட்டபோது—[illegible] வரம் தெருக்களிலே மக்கள் 'கல்கி' யாரைப் பார்த்து அனுதாபப்பட்டபோது—அவர்களை [illegible] என்றெண்ணிக் கைகூப்பி வணங்கினாரே, அதே 'கல்கி'யாரின் இதயமேதான் ஜனசக்திக்குத் தீ வையுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. கல்கி கிருஷ்ணமூர்த்தியாரின் [illegible] லேயே 'கல்கி' மீது அனைவருக்கும் சந்தேகம்தான் பிறந்தது. அவர் காலத்தில் இட்லரின் [illegible] இலக்கணம்தான் நாடாளும் வாய்ப்புப் பெறப்போகிறது என்று கல்கி மனப்பால் குடித்ததையும், அதன் பயனாய் இட்லரின் அழிவுச்சக்தியை ஜாடையாகப் புகழ்ந்ததையும், 'இட்லர் ஆரியபுத்ரன்' என்று அவர் மனதார எண்ணியதையும் நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. அந்த அடிப்படைக் கருத்தின் சாயல் இந்த வாரக் கல்கியின் தலையங்கத்தில் படிந்திருக்கிறது. 'பாராட்டுகிறோம்' என்ற தலைப்பில், தட்சிணப்பிரதேசத்தை ஆதரித்துப் பேசிய 'ஆச்சாரிய தூதர்' சுப்ரமணியத்திற்குப் புகழ்மாலை சூட்டிப் பூரிப்படைந்திருக்கிறது. இந்த நாட்டு மக்களை எவ்வளவு எளிதாக எண்ணியிருந்தால், 'ராஜதந்திரமும் [illegible] பிரயோகிக்கவேண்டிய இடத்தில் வாக்குப் பெட்டியை நுழைப்பது நாட்டுக்கு நன்மை தராது' என்று எழுதியிருக்க முடியும்?

— 5-ம் பக்கம் —

காஞ்சி இளைஞனும் மிதிலை முரடனும்

உதயபானு தன் வண்ணக்கதிர்களால்-விண்ணையும் மண்ணையும் வர்ணக்கலவைகளைப் பூசி அழகு செய்திருந்தது. இரவணங்கு சந்திரனை முயங்கக் காலம் நோக்கியிருந்தாள். வீதிகளில் வருவோரும் போவோரும் மிகுந்திருந்தனர். மணக்கும் மலர்களை மாலையாக்கி விலை கூறுவோரின் குரல் இனிமையாக, தெருக்களில் ரீங்காரம் செய்தது.

அழகு மணக்கும் வீதி! ஆணும் பெண்ணும் வீதியில் நடக்கின்றனர். அழகுக்கு அழகு செய்யத்தான்போலும் ஆரணங்கொருத்தி மலர்க்கொடிபோல ஆடிவந்தாள். வாலிப விழிகள் அவ்வனிதாமணியின் வசீகரத்தில் விழுந்துபோயின! இதயத்தில் துள்ளும் எண்ணங்களைச் சொல்லமுடியாமல் இளைஞர்கள்—இரு விழிகளாலும் அச்சுந்தரியை அச்சுறுத்தலாயினர்! ஆயிரமாயிரம் நயனங்கள் அந்நங்கையை முற்றுகையிடலாயின!

வாலிபப் பட்டாளத்தின் தாக்குதலையோ, முற்றுகையையோ அவள் சட்டை செய்யக் காணோம். செவ்வரி படர்ந்த தன் இரு விழிகளாலும் இளைஞர்களின் இதயங்களைக் கொத்திக்கொண்டே நடையைக் கட்டினாள். அவளின் அசைவுகள் அத்தனையும் அங்கிருந்தோரின் அகங்களை அலையாடவைத்தன. அதுபோது—அங்கே! வாலிபம் புரளும் மேனி! குறும்பு தவழும் முகம்; சுருண்டு சுருண்டு அழகை அடக்கிவைத்துள்ள கேசம்; மென்னகை தவழ இளைஞன் ஒருவன், அத்தெரு வழியே வந்தான். அவனுக்கு எதிரே அந்த அழகி வந்தாள்! அவன் விழிகளில் பட்டுவிட்ட அப்பாவை—அவன் நெஞ்சில் தங்கிப் போனாள். அவன் எண்ணங்களில் அவளின் அழகு தீவிர சிந்தனையைக் கிளறிவிட்டது அந்த வாலிபன் மகாக்குறும்பனோ என்னவோ, நாமறியோம்!

ஆனால், அவனின் எண்ணங்கள் செய்யும் ஜாலம், எண்ண, எண்ணச் சிரிக்கச் செய்யும். அழகை அவன் ரசிக்கும் விதமே தனிதான். படபடவென்று அடித்துக்கொள்ளும் இளைஞர்களின் எண்ணங்கள்—ஆயிரமாயிரம் பக்கவாட்டங்களிலிருந்து—கோணங்களிலிருந்து அழகை அலசிப்பார்க்கும். இதோ இந்த இளைஞனின் இதயம் செய்யும் ஜாலக் குறும்பைப் பாருங்கள்.

அவன் அழகு மணக்கும் அந்த இளநங்கையைக் காண்கிறான்-ரசிக்கிறான். "ஆ! ஆ! என்ன அழகு! அந்திமாலைக்கு அழகு போதாது என்றுதான் இந்த அழகுத்தேவதை ஆடிவந்தாளா? அந்தி வேளையில் இத்துணை எழிலுள்ள பெண் வீதிவழியே வரலாமா? அப்படித்தான் வந்தாளே, ஆடவரின் பார்வைக்குப் பசியை ஏற்படுத்தாமலாவது போகிறாளா? அதுதானே இல்லை!" என்று ஆயாசப் பெருமூச்சு விடுகிறான்.

திரும்பவும் அவன் மனதில் ஒரு திருப்புக்காட்சி வருகிறது. திரும்பவும் எண்ணங்கள் சிலிர்க்கின்றன.

"பெண்தான் ஏதோ தெரியாமல் வெளியே வந்துவிட்டாள் என்போம். அவள் அன்னையாவது அவளை வராமல் தடுக்கக் கூடாதா? அவளின் அழகு விழிகளுக்கு அழகு போதாதென்று அஞ்சனம் வேறு தீட்டியிருக்கிறாள். நீண்டு நெளியும் கேசத்தை, வாரிச் சிங்காரித்துக் கொண்டை வேறு போட்டிருக்கிறாள்! புள்ளிமானைப் போலத் துள்ளித் துள்ளி நடக்கும் இந்த மடமானைத்தான்-'வீதியில் விளையாடி-வா பெண்ணே' என்று அனுப்பியிருக்கிறாள்! இத்துணை அழகையும் செய்து இந்த அழகுப் பெண்ணை, ஏன் அந்தத் தாய் வெளியே அனுப்பினாள்? ஆடவரின் இதயங்களைக் கொண்டு செல்லும்அந்த அழகியின் தாயாருக்கு உலகோடு எப்போதேனும் பகை உண்டோ? அப்படி அந்தத் தாய்க்கு உலகோடு விரோதம் இல்லையெனில்—தன் அழகுப்பெண்ணை அனுப்பி இப்படி ஆடவரின் இதயங்களைக் கொன்றிருக்க மாட்டாளே...!" என்று ஏதேதோ எண்ணுகிறான்.

இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? அந்த இளைஞனைக் குறும்பன் என்கிறேன் நான்—நீங்கள் என்னவென்கிறீர்கள்? அந்த இளைஞனின் இதய ஆழத்திலிருந்து எழும் "உருவுடை இவள் தாயாருக்கு உலகொடு பகை உண்டோ" என்ற இந்த வார்த்தைகள் எத்துணை அனுபவமும், நகையும் நிறைந்தது என்று ஊன்றிக் கவனியுங்கள். அந்தக் குறும்பு இளைஞனை உருவகித்த கவிஞனை உங்களுக்குக் காட்டுகிறேன். ஆனால் ஒன்று—அப்புலவரின் பெயர் தெரியாது! முகவரிமட்டும் தெரிந்திருக்கிறது. விசித்திரம் என்கிறீர்களா—வேதனையாகவும் தானிருக்கிறது. தமிழிலக்கிய படைப்பாசிரியர்கள் இப்படித்தான் மறைக்கப்பட்டும், ஒழிக்கப்பட்டுமிருக்கிறார்கள்.

அப்புலவரின் முகவரி யாது என்கிறீர்களா? காஞ்சிமாநகரில்-நந்திவர்மனின் அவைப்புலவராக இருந்தவர் அவர். நந்திவர்மன் மீது அவர் பாடிய பாடல் தொகுதிதான் நந்திக்கலம்பகம் எனும் நூல் அந்தக் குறும்பு இளைஞனை உங்கட்கு நான் அறிமுகம் செய்ய ஆதாரமாக இருந்தது கலம்பகப் பாடல்தான். பெயர் காணாப் பெரும்புலவரின் பாடல்தான் அவர் புகழ் பாடுகிறது.

புலவரின் புகழ் பாடும் பாடல்களில் ஒன்று—இளைஞனைத் தன்னுள்ளடக்கியுள்ள அந்த அருமையான பாடல் இதோ:

" அரிபயில் நெடு நாட்டத்(து) அஞ்சனம் முழுதூட்டிட
புரிகுழல் மடமானைப் போதர விட்டாரால்
சுரபதிஎனும் நந்தி தொன் மயிலாப்பூரில்
உருவுடை இவள்தாயார்க்(கு) உலகொடு பகை உண்டோ!"

★

மிதிலைநகர வீதி! அழகிய கூடகோபுரங்கள். போவோர் வருவோரின் சப்த அலைகள் செய்யும் ஜாலம். ஆண்களும் பெண்களும் வருகின்றனர், போகின்றனர். அழகைத் தேக்கி வைத்திருக்கும் அழகி ஒருத்தி அன்ன நடை பயின்று தெருவழியே வருகிறாள். ஆடவரின் விழிகள் வெல்லம் கண்ட ஈக்களைப்போன்று அந்த அழகியை மொய்க்கின்றன. ஆண்மக்களின் விழித்தாக்குதலை அவளால் தாங்க முடியவில்லை. கால்கள் இரண்டும் பின்னிக் கொள்வதைப் போன்ற ஒரு பிரமை. நாணம் வந்து சுற்றிக்கொள்வதைப் போன்ற ஒரு நினைவு. அவள் முகம் சிவக்கிறது; நெஞ்சம் விம்முகிறது; சமாளித்து நடக்கிறாள். அவளின் மென்நடை ஆடவரின் ரசனைக்குத் துணை செய்கிறது.

வாலிபனொருவன் அவளுக்கு எதிரே வருகிறான். அவளின் அழகு அவனை மயக்குகிறது. அவளை முயங்கவேண்டும் என்ற ஆசை அவன் மனதில் பீறிடுகிறது. அவன் கண்கள்—அவளின் முகத்தை முற்றுகையிடுகின்றன. பிறைபோன்ற அழகிய அந்த நெற்றி; சிலைபோலும் கரும்புருவங்கள். துடிக்கும் இமைகள்.

அந்த இமைகளுக்குள்ளே சுடர் வீசும் கரும் வைரம்போன்ற விழிகள். தேன் ததும்பும் இதழ்கள்; அந்த இதழ்கள் மலரும் போது சிரிக்கும் முல்லைப் பற்கள். கதுப்புக் கனியும் கன்னங்கள். அழகிய கழுத்து! அதற்கும் கீழே...! அவன் கண்கள் அங்கேயே நிலைத்துவிடுகின்றன. பிறகு அவைகள் எங்கும் செல்ல மறுக்கின்றன. கச்சணிந்த தனங்களில் அக்காளையின் கண்கள் குத்திட்டுவிடுகின்றன. அதன் பயன்—அவன் எண்ணங்கள், கண்கள் பதிந்த அங்கத்தையே சுற்றிச் சுற்றி வருகின்றன. உணர்ச்சிகள் எல்லாம் குத்திட்டு விழிகள் நிலைத்த இடத்தையே ஆக்கிரமித்துக் கொண்டன. அவன் சிந்தை இவ்வுலகையே மறந்து போயிற்று. கால்கள் மட்டும் தப்படிகள் வைத்தன. வழியில் வரும் போகும் ஏதும் அவனுக்குத் தோன்றவில்லை. அம்மடமானின் தனங்களின்மீது வைத்திருந்த விழிகளை வாங்கவில்லை அவ்வாலிபன். அதனால் அவன் வழி தடுமாறவேண்டியதாயிற்று. குருடன்போன்று சென்றான்.

> கம்பர் கண்ட மிதிலாபுரி இளைஞனையும், நந்திக் கலம்பக ஆசிரியர் கண்ட காஞ்சி இளைஞனையும் நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார் வேலை. எஸ். எழில். இருநாட்டு இளைஞர்கள்—அவர்களை வர்ணித்த தமிழ்நாட்டு இரு கவிஞர்கள். இந்த இருவருக்குள்ளே எவ்வளவு வேற்றுமை? பண்பாட்டிலே இரு கவிஞர்களுக்கும் எவ்வளவு இடைவெளி? ஒருவர் புகழ்ச்சிக்கு ஆளாவதையும், மற்றொருவர் இகழ்ச்சிக்கு இலக்காவதையும் இக்கட்டுரை சொல்கிறது.

மலையைப்போன்று மிகப் பெரும் மதயானை ஒன்று அசைந்தாடி வீதிவழியே வரலானது. அந்த இளைஞன் தன் கண்ணோட்டத்தைத் திருப்பாமலே வந்துகொண்டிருந்தான். மலைமீது யாரோ கல்லை எறிந்ததைப் போன்ற நிகழ்ச்சி வீதியில் நடந்துவிட்டது. ஆமாம், மதயானையோடு முட்டிவிட்டான் மதமேறுத அந்த வாலிபன். அதன் பலன்—அவன் தரையில்...! யானை நடந்துகொண்டிருந்தது...! போவோர் வருவோர் எல்லாம் அவன் நிலைகண்டு சிரித்தனரோ, சிந்தித்து அனுதாபப்பட்டனரோ—யாரே அறிவர்!

நந்திக் கலம்பக இளைஞன் அழகியைக் கண்டான்—ரசித்தான்! அதன் பலனாக அவன் சிந்தனை சுழன்றது. ரசிக்கும் தன்மையான தன் எண்ணங்களைக் குறும்புத்தனமாக வெளியிட்டான்; எதிலும் தன் கண்களையோ, கருத்துக்களையோ நிலைகுத்தச் செய்து—மலையோடு மோதி மண்ணில் புரளவில்லை.

ஆனால், மங்கையின் கொங்கைகளின்மீது தன் கண்ணோட்டத்தை நிலைகுத்தச் செய்து—மதயானையோடு முட்டி மண்ணில் புரண்ட இந்த இளைஞன்...! அவன் யார் என்றே உங்கட்குச் சொல்லவில்லையா? சொல்லிவிடுகிறேன். அவன் வேறு யாருமல்ல 'நம்' கம்பராமாயண இளைஞன்தான்! கம்பர் உருவகித்த மிதிலாபுரி வாலிபன்தான் அவன்; அந்த இளைஞனை அறிமுகப் படுத்தும் பாடல் இதோ:

" வார் குலாமுலை வைத்தகண் வாங்கிடப்
பேர் கிலாது பிறங்கு முகத்தினான்
தேர் கிலாநெறி யந்தரிற் சென்றொரு
மூரி மாமத யானையை முட்டினான் "

அழகிய இளநங்கையர் இருவர். அவர்களைக் கண்டு களித்து ரசித்த இளைஞர் இருவர். இரு இளைஞர்களின் எண்ணங்களும் எத்தகையன? காஞ்சிமாநகர் இளைஞனும், மிதிலாபுரி வாலிபனும்...! இவ்விருவரில் உங்கட்கு யாரைப் பிடித்திருக்கிறது? தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்! காஞ்சியா? மிதிலையா?

எண்ணம்

மலர் 2 | 13-3-56 | இதழ் 39

பட்டாளம் சேர்ப்போம்!

தமிழ்நாட்டில் எத்தனையோ அரசியல் கட்சிகள் தோன்றித் தோன்றி மறைந்திருக்கின்றன. கொள்கையிலே உயிரில்லாமல் அழிந்த கட்சிகள், பின்பற்றுவார் இல்லாமல் அழிந்த கட்சிகள், முறையான சட்டதிட்ட அமைப்பு முறை இல்லாமல் அழிந்த கட்சிகள், தகுதியான தலைவர் இல்லாமல் அழிந்த கட்சிகள் இப்படிப் பல ரகமுண்டு கூடிக் கலைந்த கட்சிகளில்.

தி. மு. கழகம் எந்த விதப் பற்றுக்குறைகளும் இல்லாமல் பூரணத்துவம் பெற்றிருப்பதால்தான் குறுகிய காலத்திற்குள்ளேயே எதிர்க் கட்சிகளுக்கெல்லாம் சிகரமாக அமைய முடிந்தது. பண்டிதர்களும், பக்தர்களும் முறியடிக்க முடியாத சமுதாயக் கொள்கை, வரலாறும், வகையான நிலநூலும் நீதிசொல்லும் நாட்டுப் பிரிவினை, பணத்தோட்டம் எங்கே? அதை வளப்படுத்துவதெப்படி என்பதை ஆய்ந்து பார்த்த பொருளியல் சித்தாந்தம்-சுவைமிக்க இந்த மூன்று பாலருவிகளை நீரோட்டமாகக் கொண்டு ஒளிவிட்டு நிற்கும் தி. மு. கழகத்திற்கு, அமைப்பு முறை, சட்டதிட்டம் இவைகளும் முறையாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்த 'தமிழ்நாட்டுத் தாமரைஇலைத் தண்ணீர்' சுபாவத்தினர் எத்தனையோ பேர் பெருமூச்சு விட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் இயங்கியது தங்களுக்கு நினைவுக்கு வருவதாகவும் வாய்விட்டுச் சொல்லியிருக்கிறார்கள். கட்சிக்கென ஒரு கட்டிடம், கட்சிக்கென ஒரு தினத்தாள், கட்சிக்கென ஒரு மைதானம்! மக்கள் சக்தி உருவாக்கித் தந்த இந்த உழைப்பின் சின்னங்கள், இயக்கத்தின் உட்பலத்தைத் தெளிவாக்கிக் காட்டும் ரசாயணக் கண்ணாடிகளாக விளங்குகின்றன. தென்னாட்டிலே நடைபெறும் போராட்டங்கள் அனைத்தும் தி. மு. கழகத்தாரால் நடத்தப்படுவதுதான் என டில்லியிலே உள்ள 'ராஜபார்ட்'காரர்கள் நினைத்திடும் வகையில் இயக்கம் வலுப்பெற்றிருக்கிறது. இத்தகைய நல்ல வாய்ப்பையும், பெருமையையும் பெறக்கூடிய வகையில் நமது தலைவர்கள் இயக்கத்தைப் புனிதமான அரசியல் கட்சியாக்கிக் கொடுத்திருக்கிறார்கள், அவர்களுக்குத் தலைவணங்குவோம்.

கடுமையான உழைப்பாலும், கொள்கை விளக்கத்தைச் சுவைபடக் கூறும் நல்ல தமிழ் எழுத்தாளர்களாலும், ஆற்றல் மிகுந்த அழகு தமிழ்ப் பேச்சாளர்களாலும் வளர்க்கப்பட்ட நமது கட்சி, இன்று, மக்கள் மத்தியிலே 'நமது பலம் இவ்வளவு' என்று காட்டவேண்டிய உயர்ந்த கட்டத்திற்கு வந்திருக்கிறதென்றே நாம் கருதுகிறோம். அண்மையிலே தென்னாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்துவந்த நமது பொதுச்செயலாளரும், துணைப் பொதுச்செயலாளரும் ஊருக்கு ஊர் கழகம் இருப்பதையும், மரத்துக்குமரம் இரு வண்ணக்கொடி பறப்பதையும் கண்டு பெருமகிழ் வெய்தியதோடு, உறுப்பினர் சேர்க்கும் காலத்தின் முடிவு மிக அண்மையிலே வந்துவிட்டது குறித்து ஆயிரக்கணக்கான தோழர்கள் வாய்ப்பை இழந்துவிட்டதற்கு வருத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்கள். நமது இயக்கத்தில் உறுப்பினராதலை வாழ்வின் கடமைகளில் ஒன்றென நினைக்கக்கூடிய உன்னதநிலையை நமது கழகம் அடைந்திருக்கிறது! எத்துணைச் சிறப்பு! இன்பநினைவில் இதயம் விரிகிறது! முகம் மலர்கிறது! ஆனால் இந்த இன்பம் மேலும் மேலும் பெருக, இடித்துரைப் போரும் எட்டிநின்று ஏசற்கணைகளைத் தொடுப்போரும் வெட்கித் தலைகுனிய, பொதுச்செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட வேண்டும். மார்ச்சுத் திங்கள் 12 ம் நாளிலிருந்து 18 ம் நாள் வரையில் உள்ள ஒருவாரத்தை உறுப்பினர் சேர்க்கும் வாரமாகக் கொண்டு தகுதியுள்ள உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் ஈடுபடும்படி பொதுச்செயலாளர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இயக்கம் நல்ல கட்டத்திற்கு வந்திருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் உமியைப் புடைத்தெறிந்துவிட்டு உண்மையான ஜனநாயகத்துக்கு உயிரூட்டி வைத்திருக்கிறார்கள். அறநெறி பிறழா ஆற்றல்மிகுந்த பெரும்படையினர் படை வீடுகளில் முகாமடித்திருக்கிறார்கள். புதிய படை ஒன்று தயாராகிறது. அந்தப் படையில் சேரும் நாட்கள்தான் மார்ச் 12 - 18! ஏழு நாட்கள்! தாயகத்தின் விலங்கொடிக்கும் விடுதலைப் பட்டாளத்தில் அங்கம் பெறத் துடிப்போரை, மானத்தைப் பெரிதெனக் கொள்வோரை, மொழிப்பற்று மிக்கோரை, சுயமரியாதைச் செல்வங்களை ஏற்றுக்கொள்ள அதோ மார்ச் 12 வருகிறது! அதிலிருந்து ஒரு வாரம் பட்டாளம் சேர்க்கும் வாரம்! புதிய படை தயாரிக்கும் காலம்! இளைஞர்களே! எஃகு உள்ளம் கொண்டோரே! தாய்நாட்டு விடுதலைக் கட்சி அழைக்கிறது! தென்னாட்டுக் காங்கிரஸ் கட்சி அழைக்கிறது! தி. மு. கழகம் அழைக்கிறது! மார்ச்சு 12 முதல் 18 க்குள் அணி அணியாகச் சேருங்கள்! இந்த நாட்டு சுயமரியாதைக் கட்சியில் நானும் ஒருவன் என்பதற்கான உரிமைப் பட்டயத்தைப் பெறுங்கள்!

கிளைக்கழகச் செயலாளர்களே, உறுப்பினர் சேர்த்தல், உலைக் கூடத்தில் வேலுக்குக் கூரேற்றுதலுக்கு ஒப்பானது! பொதுச்செயலாளர் தந்திருப்பது ஒருவாரம்! போட்டி போட்டுக்கொண்டு உறுப்பினர் சேர்க்கவேண்டும்! அறிவகமாம் நமது தலைமை நிலையம் உங்கள் பால் வைத்திருக்கும் தூய்மையான நம்பிக்கை துளிர்விடட்டும்! உறுப்பினர் எண்ணிக்கை பெருகட்டும்!

வினை விதைக்கிறார்!

[மார்ச் 7-ந்தேதியன்று சென்னை லயோலா கல்லூரியில் பேசிய சென்னை முதல்வர் காமராசர் கவனத்திற்கு இந்தப் பகுதியைக் கொண்டு வருகிறோம். அவருக்குத் தமிழ் எழுதப்படிக்கத் தெரியும் என்ற நம்பிக்கையில், அவருடைய அன்றைய பேச்சின் சில பகுதிகளைக் கீழே தடித்த எழுத்துக்களில் தந்து, பதிலும் கொடுத்திருக்கிறோம்.]

★ **"சர்வகட்சிக் கூட்டணி தேர்தலுக்காகத்தான் என்று பகிரங்கமாகச் சொல்லப் பயப்படுகிறார்கள். அப்படிச் சொன்னால், காங்கிரசைக் காட்டிலும் நீங்கள் என்ன சாதிக்கப் போகிறீர்கள்' என்று மக்கள் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும்!"**

மக்கள் என்றால் காமராசருக்கு என்ன என்றே தெரியாது போலும்! இத்தனை கட்சிகளைக்கொண்ட சர்வகட்சிக் கூட்டணிக்கும் அப்பாற்பட்ட-எந் கொள்கையிலேயும் பற்றில்லாதவர்கள் தமிழ்நாட்டில் இருப்பார்களானால் அவர்கள் கைக்கூலிகளாகவோ அல்லது 'ஜீவஜந்து'க்களாகவோதான் இருக்கக்கூடும். மனிதர்களாக இருக்கமாட்டார்கள் 'பொதுமக்கள்' என்ற பேரில்!

★ **நான் சொல்கிறேன் - கூட்டணியினரின் உண்மையான நோக்கம் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து விடவேண்டு மென்பதுதான்.**

எத்தனை கட்சிகள் சேர்ந்து எந்தப் போராட்டம் நடத்தினாலும் காமராசர் கண்களுக்கும் கருத்துக்கும் அண்ணாவும், தி. மு. கழகமும் தான் தெரியும். தன்னைக் காட்டிலும் கைதேர்ந்த ராஜதந்திரி ஒருவர் இருக்கிறார் என்பதை நேரில் கண்டறிந்து அல்லல் பட்டவரல்லவா!

★ **இவர்கள் (சர்வகட்சிக் கூட்டணி) கோழைகள்! அரசியல் கட்சிகள் என்று அழைத்துக்கொள்ளத் தகுதியற்றவர்கள்!**

கொள்ளையடிப்பது, தீ வைப்பது, கொடிக்கம்பில் ஆணியை அடித்து வைத்துக்கொண்டு மாற்றுக் கட்சிக்காரர்களை அடிப்பது, ரயிலைக் கவிழ்ப்பது, கணக்குக் கேட்பவர்களைக் கட்சியைவிட்டு நீக்கி வைப்பது-இவைகள் ஒரு அரசியல் கட்சிக்குள்ள பண்புகள் என்றால் இத்தனை 'பண்பு'களைக் கவ்விக்கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியே 'அரசியல் கட்சி'யாக இருக்கட்டும் அந்த நல்ல பெயர் சர்வகட்சிக் கூட்டணிக்குவேண்டாம்.

★ **காங்கிரஸ் என்றாவது மக்கள் விரும்பாததைச் செய்து குற்றத்திற்கு ஆளானதுண்டா?**

நன்றி மறவாத தமிழினத்திற்கு அவமானம்! தன் வருகைக்குக் கணவாய் அமைத்துக் கொடுத்த கல்வித் திட்டத்தை காமராசர் மறந்தே போனார்! ஆமாம் அவர் இப்போது போதையில்லவா இருக்கிறார், பதவிப் போதையில்!

★ **இவர்கள் கோழைகள்! வெளிப்படையான கருத்தைச் சொல்ல நாங்கள் அஞ்சியேதே இல்லை!**

தட்சிணப்பிரதேசத்தை காமராசர் ஆதரிக்கிறாரா இல்லையா? வெளிப்படையாகச் சொல்வது தானே! கோழைகள் யார்?

தென்றல் இலக்கியப் போட்டி

பெருங்கதை	எழுதியவர்	செக் எண்
தென்பாண்டி வீரன்	ப. நெடுமாறன், மதுரை.	A 789414 (ரூ. 150)
கல்லக்குடி	இசையமுது, கடலூர்.	A 789415 (ரூ. 150)
(இரண்டாம் பரிசு)		
நிலவொளியில்	இரா. விசுவநாதன், திருவாரூர்.	A 789416 (ரூ. 100)
கருகிய மலர்கள்	புதுமதியன், புதுப்பாளையம்	A 789417 (ரூ. 100)

காவியம்	எழுதியவர்	செக் எண்
பூங்குழலி	கி. கண்ணப்பன், கண்டாச்சிபுரம்.	A 789418 (ரூ. 150)
கொடிமின்னல்	கோ. பெ. நாராயணசாமி, கோனூர்.	A 789419 (ரூ. 150)
(இரண்டாம் பரிசு)		
பாரி முல்லை	அ. வேதாசலம், அறந்தாங்கி.	A 789420 (ரூ. 100)
காதல் துறவி	சி. தண்டபாணி.	A 789421 (ரூ. 100)

குறிப்பு: *பரிசு பெற்றவர்கள் எல்லோருக்கும் 8·1·56 அன்று பரிசுத் தொகைக்குரிய செக்குகள் அனுப்பப்பட்டு விட்டன. எல்லோரும் தொகையையும் பெற்றுக்கொண்டு விட்டார்கள். ஆனால், புதுப்பாளையம் தோழர் புதுமதியன் அவர்கள்மட்டும் தனக்கு செக் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். அதன்பேரில் நாங்கள் செக் எண்ணைக் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட பாங்கிக்கு* **(Bank)** *தகவல் கொடுத்திருக்கிறோம்.*

—நிர்வாகி.

நாட்டியக்காரி நளினாவைப் பற்றி நாடக உலகம் மட்டுமல்ல நாடே அறிந்திருந்தது. அந்தக் கட்டழகியின் நாட்டியத்தைக் காணப் பட்டிகளிலிருந்து வருவோர் தொகை ஏராளம். அவளது ஆட்டத்தில் நாட்டம் கொண்டு அவளை அடைய நினைத்த ஆணழகர்கள் அனந்தம். அந்தப் பூவையின் புன்னகைக்கு ஏங்கிக்கிடந்த பொருளாதாரப் புற்றீசல்கள் மிகப்பலர். அவளது கண்வீச்சில் ஆவியைப்பறிகொடுத்த கம்பெனி நடிகர்கள் கணக்கிலடங்க மாட்டார்கள். ஆனால், இவ்வளவு பேருடைய எண்ணத்திற்கும் ஏக்கத்திற்கும் இடங்கொடுக்காத அந்த இன்பரோஜா தனது விருப்பத்தை வேறு யாரோ ஒரு இதயராஜாவிடம் வைத்திருந்தது. அந்த இதயராஜா யாரென்று அறிந்துகொள்ள முடியாமல் அல்லற்பட்டனர் சக நடிகர்கள். தனது இதயராஜாவின் துணை இருக்கிறது என்ற காரணத்தால் நளினா செய்த துடுக்குத் தனங்கள் பல.

சந்திரன் அந்த நாடகக் கம்பெனியின் கதாநாயகன். அவன் கண்கள் பலமுறை நளினாவைச் சுற்றி வட்டமிட்டன. ஆனால் அவை வாட்டத்தைத்தான் பரிசாகப் பெற்றன. சொந்த அத்தை மகள் சொர்ணம் இருக்க, அவளை வெறுத்துவிட்டு விந்தை நளினாவை வீழ்த்தத் திட்டமிட்டான் அவன். பொருளாதார வசதியும் பூவையரை மயக்கும் திறனும் உடைய புண்ணியவான்களாலேயே அவளை மயக்க முடியாதபோது சந்திரனின் ஜம்பம் மட்டும் பலித்துவிடுமா?

கமலக்கண்ணர் - கம்பெனி முதலாளி. கம்பெனியின் பழைய கதாநாயகி கனகத்தைக்கூட வீழ்த்திவிட்டார் அந்த விநோத மனிதர். ஆனால் புதிய கதாநாயகி-நாட்டியக்காரி நளினாவைத் தன் எண்ணத்திற்கு இலக்காக்க முடியாமல் தவித்தார். அவரது தவிப்பு அவருக்கே வேதனையையும் வெட்கத்தையும் தந்தது. ஆனாலும் நேரத்தை எதிர்பார்த்து நினைவைச் செலுத்தியிருந்தார்.

மேனேஜர் மேகநாதன்-கம்பெனி மேனகாக்களிடம் 'மெத்தவும் கெட்டிக்காரர்' என்ற பேரைப்பெற்றவர். அவரது எண்ணமும் இதயமும்கூட நளினாவைச் சுற்றிச் சுற்றி வந்தன. நளினா - யாரையும் விரும்பாத நளினா-மேனேஜர் மேகநாதனிடம் இதயத்தை வைத்திருந்தாள். ஆம்! மேகநாதன்தான் நளினாவின் இதயராஜா.

மேகநாதனும் நளினாவும் பொருத்தமான ஜோடி. மேகத்தைக் கண்டாடும் மயில் அவள். மயிலைக் கண்டு மனமகிழும்மன்னன் அவன். இருவரின் சந்திப்பு சில சமயங்களில் கம்பெனிக்குள்ளேயே நடைபெறும். சில சமயங்களில் ஊருக்கு வெளியே உள்ள பாழடைந்த மண்டபத்திலே அவர்கள் காதற் பேச்சு நடைபெறும். பாழடைந்த மண்டபம் அவர்களது காதற் பேச்சை எதிரொலித்துப் பெருமை எய்தும். அந்தக் காதற் புறாக்களைக் கண்ட பூங்காகூட வாழ்த்தி வரவேற்கும். ஆனால் அவர்களது தொடர்பைத் தெரிந்துகொண்ட வல்லூறுகள்தான் அவர்களை வாழவிடாமல் தடுக்க முற்பட்டன. 'நளினா தமக்கில்லையே' என்ற ஏக்கத்தால் அந்தத் தருக்கர்கள் பொறாமைப் பட்டனர்.

சந்திரன் ஏமாற்றத்தின் முதல் பிரதிநிதி-கமலக்கண்ணர் இரண்டாம் பிரதிநிதி. இவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசினர். மேகநாதனை ஏமாற்றத் திட்டம் தீட்டினர். நளினாவுக்கும் அவனுக்கும் உள்ள அன்புறவிற்கு வேட்டுவைக்க விழைந்தனர்.

ஒருநாள் இரவு! ஞானமற்ற மக்களை எள்ளி நகையாடிக் கானம் பாடிக் கொண்டிருந்தனர் மேகநாதனும் நளினாவும். எண்ணாத எண்ணத்தை யெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தது அந்த இளஞ்சோடி. இல்லாத கற்பனைகள் செய்து இதயக்கடலிலே இன்பத் தோணியைச் செலுத்திக் கொண்டிருந்தனர். கானத்திலே கவலையை ஒழித்துக் களிப்பு மழையை ஏற்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

"மேனேஜரய்யா! முதலாளி உங்களைக் கூட்டிக்கிட்டு வரச்சொன்னாருங்க"-என்று சொன்ன கம்பெனிச் சிறுவன் சின்னப்பனின் குறுக்கீடு வானிலே பறந்துகொண்டிருந்த அந்த வானம்பாடிகளைத் தரைக்குக் கொண்டுவந்தது. நளினாவின் இதயம் மட்டும் படபடவென்று அடித்தது.

"இதோ! பின்னாலேயே வருகிறேன் என்று சொல்"-மேகநாதன் இப்படிச் சொல்லி அனுப்பினான் சின்னப்பனை.

முதலாளி தனது தனி அறையிலே அமர்ந்திருந்தார். அவரது முகம் மட்டும் அவரது உள்ளத்துச் சிந்தனையை வெளிக் காட்டிக் கொண்டிருந்தது. மேகநாதன் அங்கே சென்றான். அவனைக் கண்டதும் அமரச் சொன்னார் முதலாளி. தனது புதிய திட்டத்தை மேகநாதனிடம் சொல்ல முற்பட்டார் அவர். அதற்குள் தொண்டை அடைத்தது.

தமிழ்ப்பித்தன்

அமைதியான அறை - அங்கே குமுறும் உள்ளம் கொண்ட முதலாளி - அருகிலே தூபம் போடும் சந்திரன்-எதிரே ஒன்றும் அறியாத மேகநாதன். இந்த வேடிக்கையை வெளியே இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் நளினா. அவர்களின் உரையாடலைக் கதவோரத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்தாள் அவள்.

முதலாளி பேசத் தொடங்கினார். "பக்கத்து ஊரிலே ஒரு பெண் நல்ல நடிகையாம். சிறந்த அழகியாம். மேலும் தன் சொந்தக் குரலிலேயே பாடுகிறாளாம். நாட்டியம் ஆடவும் தெரியுமாம். அவளை அழைத்து வந்து நமது கம்பெனியின் நிரந்தரக் கதாநாயகியாக ஆக்கலாம் என்று நினைக்கிறேன். உங்கள் எண்ணம் என்ன?"-என்றார். அறையிலே சிறிதுநேரம் மௌனம் நிலவியது. தூபம் போட்ட சந்திரன் துவைத்து வைத்த துணிபோல இருந்தான். பின்னர் அமைதியைக் கலைத்துக் கொண்டு எழுந்தது மேகநாதனின் குரல். "பொதுவாக புதியவர்களைக் கொண்டுவந்து அறிமுகம் செய்வது எளிதல்ல. ஆனால், உங்கள் பிரியத்தைக் கெடுக்க எனக்கு விருப்பமில்லை. எப்போது வேண்டுமென்றாலும் போய்ப் பார்க்கலாம் அந்த நடிகையை"-மேகநாதன் சொல்லி முடித்தான். "உடனே புறப்படுவோம்" என்றனர் கமலக்கண்ணரும் சந்திரனும். மேகநாதனைச் சிறிதுநேரம் வெளியே அனுப்பிவிட்டு அவர்கள் இருவரும் ஏதோ பேசினார்கள். அதை ஒட்டுக் கேட்டாள் நளினா. அவளது அகமும் புறமும் சிலிர்த்தன. "இவர்கள் சொன்னபடியே நடந்துவிட்டால்..." இப்படித் தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டாள். அவளுக்கே பயங்கரமாக இருந்தது அவளது எதிர்கால வாழ்வு.

காத்துக்கொண்டிருந்த காதலியிடம் - புன்னகைக்கும் பொறுமலுக்கும் இடையே அல்லாடிக் கொண்டிருந்த நளினாவிடம்கூட, மேகநாதன் விடை கேட்கவில்லை. கமலக்கண்ணன், சந்திரன், மேகநாதன் மூவரும் வேற்றூர் நடிகையைக் காணப் போய்க்கொண்டிருந்தார்கள் அந்த இரவில். நளினா அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவர்கள் உருவம் மறைந்தது. நளினாவின் நயனத்திலே கண்ணீர் துளிர்த்தது.

முதலாளியின் திட்டத்தால் மனமுடைந்து போயிருந்தாள் அவள். இன்னொரு கதாநாயகி வந்தால் தனக்குள்ள மதிப்புக் குறைந்துவிடும் என்று எண்ணத் தவறவில்லை அவள். அவளது உள்ளம் துன்பத்தைக் கக்கியது. பேனாவையும் தாளையும் எடுத்தாள். ஏதோ எழுதினாள். அவள் உள்ளம் அமைதி பெற்றுவிட்டது. மனத்திலுள்ளதை எழுத்தில் எழுதி விடுவதில் மனித மனம் அமைதி பெறுகிறது, ஆறுதல் அடைகிறது என்பதற்குச் சாட்சியாக இருந்தது அவளது செய்கை.

மறுநாள் இரவு! மேகநாதன், கமலக்கண்ணன், சந்திரன் மூவரும் சென்றது போலவே திரும்பிவிட்டனர். அவர்கள் சென்ற காரியம் வெற்றியளிக்கவில்லை. அந்த நடிகைக்கு ஏற்கனவே கமலக்கண்ணரைத் தெரியுமாம். அதனால் அவரது கம்பெனியில் சேர மறுத்துவிட்டாளாம். இதைக் கமலக்கண்ணரே சொல்லிக் கொண்டு வந்தார். அந்த நடிகையின் நாத்திமிறை நாற்பது முறை சொல்லியிருப்பார் அந்த 'நல்லவர்.' சந்திரன் வாய்மூடி மௌனியானான். தனது எண்ணம் பலிக்கவில்லை என்ற எண்ணத்தால், ஏமாற்றத்தால் இருந்த இடம் தெரியாது இருந்தான் அவன். மேகநாதன் தனது காதலியைக் காண ஓடோடிச்சென்றான். 'நளினா' என்றழைத்தான். பேச்சே இல்லை. இன்னொரு முறை அழைத்தான். அப்போதும் பேச்சில்லை. அவளது அறை திறந்தே கிடந்தது. ஆனால் அவள் இல்லை. மேகநாதனை அதிசயத் தேள் கொட்டிவிட்டது. 'ஆ'வென்று கூச்சலிட்டான் நளினாவைக் காணாததால்.

முதலாளி தனது தனி அறைக்குச் சென்றார். அவரது மேஜை மேல் இருந்த கடிதம் அவரது கண்ணில் பட்டது. 'முதலாளிக்கு' என்று அதன்மேல் எழுதியிருந்தது. அதை எடுத்தார்; படித்தார்:

"அன்புள்ள முதலாளிக்கு!

மேனேஜர் மேகநாதன் என் அருமை அத்தான். ஆம்! அவர் என்னை மாலையிட்டு ஏற்றுக் கொண்ட மணவாளர். பத்தாண்டு நிரம்பிய என்னை மேகநாதருக்குத் திருமணம் செய்துவைத்தனர் என் பெற்றோர். ஆனால் பண விஷயமாக ஏற்பட்ட தகராறு காரணமாக, திருமணம் செய்துகொண்ட ஒரு வாரத்திலேயே என்னை என் தந்தை வீட்டுக்கு விரட்டிவிட்டார் என் கணவர். அப்போது நான் பருவம் அடையாத சிறுமி. என் தந்தை வீடு சென்றேன். தாயை இழந்த என்னை ஆதரித்தார் என் அப்பா. ஆனால் என் சிற்றன்னையின் சீற்றம் அப்பாவின் தப்பற்ற உள்ளத்தைத் தணலாக்கி மகிழ்ந்தது. என்னை-தன் ஒரே மகளை-நாட்டியக்காரி ஒருத்தியுடன் அனுப்பிவிட்டார் அவர். அவளிடம் ஆறு வருடம் நாட்டியம் கற்றுக்கொண்டுதான் இந்தக் கம்பெனிக்கு வந்தேன். வந்தவுடன் என் அத்தான் இங்கே மேனேஜராக இருப்பதைக் கண்டேன். எவரது அன்புக்காக ஏங்கினேனோ அவரே இங்கு மேனேஜராக இருந்ததைக் கண்டு மகிழ்ந்தேன். பருவம் அடைவதற்குமுன் இருந்த எனது தோற்றத்துக்கும் இப்போது இருக்கும் தோற்றத்துக்கும் அதிகமானவேற்றுமை இருந்ததால் என் அத்தான் என்னை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

இப்போது கம்பெனிக்கு வேறொருத்தியைக் கதாநாயகியாக்க வேண்டுமென்று நீங்கள் பேசிக் கொண்டிருந்ததை நான் கதவோரத்திலிருந்து கேட்டேன். அந்த நடிகையையே என் அத்தானுக்கு மணமுடிக்க வேண்டும் என்று நீங்களும் சந்திரனும் பேசிக் கொண்டிருந்ததையும் ஒட்டுக்கேட்டேன். யாருடைய அன்பிற்கு நெடுநாள் ஏங்கினேனோ அவருடைய அன்பு கிடைத்துவிட்டது. இனிமேல் எனக்கு எதுவும் வேண்டாம். வருகிறேன். தயவு செய்து என்னைத் தேடவேண்டாம். இந்த விஷயத்தை என் அத்தானிடம் தெரிவிக்கவும். என் கைக்கு எட்டாமல் இருந்த ஒரு பொருளை என் கைக்குச் சில நாட்கள் தந்த இந்தக் கம்பெனிக்கு என் நன்றி.

இப்படிக்கு,
நளினா.

படித்து முடித்த முதலாளி, அங்கு வந்த மேகநாதனிடம் கடிதத்தைக் கொடுத்தார். மேகநாதன் படித்தான். பதறினான்; வருந்தினான். எட்டி எறிந்த பொருள் தன்னை யறியாமலே மீண்டும் வந்து, பின்னும் பறிபோயிற்றே என எண்ணி அழுதான். அவனது இதயக் கடலிலே புயல் வீசியது. இருள்சூழ்ந்த அந்த இடத்திலே மினுக் மினுக் என்று வெளிச்சம் ஏற்பட்டது. ஏறிட்டுப் பார்த்தான். இரண்டு மின்மினிப் பூச்சிகள் வானிலே உலா வந்து கொண்டிருந்தன. திடீரென்று ஒன்றோடொன்று சண்டை போட்டன. பின்னர் ஒன்று ஒரு திசையை நோக்கிப் பறந்தது. மற்றொன்று எதிர்திசையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. ★

பொதுமக்கள் என்பார் யாரோ ?

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

தன்னுடைய எண்ணத்தையும், கருத்தையும் நிலைநாட்டு முகத்தான் கல்கி நம்மைச் சார்ந்தவர்களுக்கும் இனிப்புச் சொல் வழங்க எத்தனித்திருக்கிறது. நாம் கேட்கும் ‘ திராவிட நாடு’ தான் தட்சிணப் பிரதேசம் என்று வர்ணம் திட்டிக் காட்ட முனைந்திருக்கிறது. டெல்லியோடு தொடர்பற்ற ‘தென்னாட்டு’க்கும், உடமைகள் அத்தனையையும் அடகு வைத்து நிர்வாணமாக நிற்கச் சொல்லும் ‘தட்சிணப் பிரதேச’த்திற்கும் வேறுபாடு தெரியாமல்—தெரிந்ததை மறைத்து நம்மிடையே தூண்டில் போட்டுப் பார்க்கிறது கல்கி. ஆட்சியிலே உள்ளவர்களை அறிவாளிகள், சிந்தனையாளர்கள் என்று தவருகக் கணித்து ‘கல்கி’ மற்றுமோர் திமிர்வாதத்தைக் கிளப்பியிருக்கிறது சில காரியங்களுக்கு ஆட்சியிலே உள்ளவர்கள்தான் மக்களை இழுத்துச் செல்ல வேண்டுமாம்! மக்களிடம் கருத்தைக் கேட்கக் கூடாதாம்!

துவக்க காலத்திலே இருந்து இன்றுவரை உள்ளுக்குள்ளேயே புறையோடிப் போயிருக்கும் கல்கியின் ஜீவலட்சியம் இங்கே புலனுகிறது. ஜெர்மானியர்களுக்குப் போரிலே வெற்றி முகம் கிடைத்துக் கொண்டு வந்தபோது ‘கரிமதம்’ கொண்டு ஆட்டம் போட்ட கல்கியின் உயிர்க் கொள்கை சர்வாதிகார ஆட்சிதான் என்பதுஇப்பொழுது வெள்ளிடைமலை யாகிறது. மக்களை ஆட்டுமந்தை என்று மதிப்பிட்ட இட்லருக்கும், மக்களைக் கேட்காமல் ஆட்சி நடத்த வேண்டுமென்ற கல்கியின் ஆசைக்கும் வித்தியாசம் என்ன?

ஒரு திட்டத்தை ஆதரிக்கும் போது. அதன் சாரத்தை ஜீரணித்துக்கொண்டுதான் எழுத வேண்டும். ஆச்சாரியார் சொல்லிவிட்டார் என்பதற்காகவோ. ஆசியாவின் ‘அகல் விளக்கு’ கூறிவிட்டது என்பதற்காகவோ கைதூக்கி நிற்பது அறிவை ஈடு வைத்த இழி செயலுக்கு ஒப்பானதாகும்.

‘ தட்சிணப்பிரதேசம்’ என்று பேசியவர்கள், ஆந்திராக்காரர்களைக் கேட்கவில்லை. கேட்டால் ஒப்பமாட்டார்கள் என்பது டில்லிக்குத் தெரியும். ஆந்திரா என்ருல் டில்லிக்குச் சிம்ம சொப்பனம்!

அடுத்து, கன்னட சர்க்கார்—அவர்கள் இறுதியிலே ஒப்பினுர்களில்லை. மீதமிருந்தவை. ஏமாந்த தமிழகமும், எதற்கும் தயார் என்றுரைக்கும் மலையாளமும்தான்.

தமிழகத்திலே. சட்டம் படித்தவர். ஆட்சிபீடத்திலே அமர்ந்து முறையான ஆட்சி நடத்தியவர்கள் அத்தனை பேருமே எதிர்க்கிருர்கள். ஆனுல் கல்கி சொல்கிறது, இத்தகைய தலைவர்களைக் கொண்ட மக்களை, படிக்காத காமராசர் இழுத்துச் செல்ல வேண்டுமாம்! வெட்கம்! இந்தியாவைக்குறித்து இடித்துரைத்த பெர்னுட்ஷாவின் முது மொழிகள் நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றன!

தமிழகத்திலே மட்டுமல்ல எதிர்ப்பு, மலையாளத்திலே எவ்வளவு பெரிய எதிர்ப்பு தெரியுமா? முக்கிய பத்திரிகைகளெல்லாம் எதிர்த்து எழுதியிருக்கின்றன.

கேரளபூஷணம்
மாத்ருபூமி
எக்ஸ்பிரஸ்
தீபிகை

—முதலிய மலையாளப் பத்திரிகைகள் தட்சிணப் பிரதேச அமைப்பை வன்மையாகக் கண்டித்து எழுதியிருக்கின்றன. காமராசருக்கு இவையெல்லாம் தெரிந்திருக்க மார்க்கமில்லை. கவனப்படுத்தினுலும், பாவம் அவருக்குப் புரியாது, சர்வகட்சிக் கூட்டணி என்ருல் என்ன? பொது மக்கள் என்பவர்கள் யார்? இவைகளுக்குள்ள ஒற்றுமையே அவருக்குப் புரியவில்லையே! கல்கிதான் சர்வாதிகார போதனை புரிகிறது என்ருல், காமராசரும் அதற்கு ஆதரவு தந்தாற்போல் மார்ச் 7-ம் தேதி லயோலாக் கல்லூரியிலே சர்வ கட்சிக் கூட்டணியைக் கண்டித்துப் பேசியிருக்கிருர்,

[மார்ச் 10-ம் தேதி சனிக்கிழமை மாலை லயோலாவுக்கு வெளியே நுங்கம்பாக்கம் ரயிலடிக்குப் பக்கமுள்ள தி. மு. க. திடலில் அறிஞர் அண்ணுவும் மற்றவர்களும் பேசுகிருர்கள்.]

அவருக்குத் துணையாகபொது மக்கள் இருக்கிருர்களாம்! யார் அந்தப் பொது மக்கள் என்று நமக்குப் புரியவில்லை. ஒருவேளை தினம், தினம், அவர் காணும் ஈ, எறும்பு, கறையான்,மூட்டைப் பூச்சி, கொசு இவைகளைத்தான் அவர் பொது மக்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கக் கூடும். அவைகள் தானே எல்லோருக்கும் ‘ பொது ’. நினைத்திருப்பார். யார் கண்டது? காமராசர் தானே! ‘காமராசரே’ பொது மக்கள் என்பார் மனிதர்கள்—பிராணிகளல்ல’ என்று அவருக்கு நாம் நினைவுபடுத்தித்தான் ஆகவேண்டுமானுல் நமது கடமையைச் செய்து தானே தீரவேண்டும்!

தான் நினைத்ததைச் சாதிக்க வேண்டுமென்று நினைக்கும் போது ஒரு சிலருக்கு இடையிலே குறுக்கிடும் காரணத்தோடு கூடிய எதிர்ப்புகள் காதில் படுவதே இல்லை.

‘ தண்ணிப் பாலைக்’ கெட்டியாக்க எண்ணும் பால் வியாபாரி அதோடு கொஞ்சம் கெட்டிப் பாலைக் கலந்து ஈடு செய்வான். டில்லிப்பால் வியாபாரி தமிழ் நாட்டில் ‘ தண்ணிப் பாலா’க இருக்கும் காங்கிரசை மலையாளத்துக் கெட்டிப்பாலைக் கலந்து ஈடு செய்யப் பார்க்கிருர். இதிலே ஆச்சாரியாருக்கும் கல்கிக்கும் பெரும்பங்குண்டு.

தனித்தனி மாகிலங்களாக இருந்தால், தனித்தனியாக டில்லிக்குப் பணம் கேட்டு வருவார்கள். மர்காணங்களை இணைத்து இருமொழி, பன்மொழி மாகாணமாக்கிவிட்டால் முன்பு மொத்தமாக இரண்டு கோடி கொடுத்த இடத்தில் இப்போது ஒன்றரைக் கோடி கொடுத்துச் சரிக்கட்டி விடக் கூடும். இது மனித இயல்பு! இதனுல் மாகாணங்களில் பற்ருக்குறை ஏற்பட்டே தீரும். வரிச்சுமையின் எடை கூடும்.

மாகாணங்கள் இணைக்கப்பட்டால் இப்போது ஒளிவிட்டு நிற்கும் தாய்மொழிப் பற்று தற்கொலை செய்துகொள்ள நேரிடும். எது ஆட்சிமொழி என்ற தகராறு வலுக்கும். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். இந்திப் பெண் கூத்தாடி வேடத்தில் தென்னுட்டில் அடியெடுத்து வைக்க ஏதுவாகும்.

எதிர்ப்புக்காண இந்த மூன்று முக்கிய காரணங்களை இதுவரை யாரும் மறுத்துரைக்க முன்வரவில்லை. கையிலே இருக்கும் மணிமுடிக்கும், கருங்கடலின் அடியிலே புதையுண்டு கிடக்கும் உலோகத்திற்கும் வித்தியாசம் உணராமல் ‘ நீங்கள் கேட்ட திராவிட நாடுதானே இந்தத் தட்சிணப் பிரதேசம்’ என்கிருர்கள்.

திராவிட நாடு—இது மேகத்தினிடமிருந்து விடுபட்ட அழகு நிலா.

தட்சிணப் பிரதேசம்—புகையோடு புகையாய் ஒளியிழந்து கிடக்கும் பகல் நேரத்துப் பாதிச் சந்திரன்.

இதில் நாங்கள் வேண்டுவது பூரணசந்திரன். மண்ணையும் மக்களையும் இன்பத்திலாழ்த்தும் பூரணசந்திரன் திராவிடக் குடியரசு. பொன் விலங்கு பூட்டப்பட்ட தட்சிணப் பிரதேசமல்ல. ‘ கீழ்ப்பாக்கம் ’ இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தென்னரசு

உள்ளத்தைக் கவரும்
உயரிய நாவல்

கருணையவர்களின் கருத்து படையல்
கருணை உள்ளம்.
படியுங்கள், மகிழுங்கள்,
செல்வி நூற்பதிப்பகம்,
12. A. சென்ட்ரல் மார்க்கெட் சந்து, மதுரை—

‘தினத்தந்தி’யின் செய்தித் திரிப்பு !

4 3-56 தினத்தந்தி இதழில், டி. ஆர். சுந்தரத்திற்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் நான் பேசியது பற்றிய குறிப்பில், “செட்டிநாட்டு ராஜா கைராசிக்காரர்” என்று குறிப்பிட்டதாக உள்ளது. இது தவறு. “தொழிலில் இவர் நிபுணர். மற்றவர் தொட்டுக் கெட்டதைக்கூட, இவர் எடுத்து வளப்படுத்தியிருக்கிருர்” என்றுதான் பேச்சோடு பேச்சாகக் குறிப்பிட்டேன். இதற்கு அப்பொருள், எப்படிப் பார்த்தாலும் வராது.

செய்தி தவறு - திருத்திக் கொள்க.

—*கண்ணதாசன்*

★——★

தென்றல்
எப்ரலில் மறுகட்டம் !

கண்ணதாசன் எழுதும்—இடையில் துவளாத சித்திரங்கள் !

முதற்பரிசு பெற்ற தொடர் கதை! புதிய வடிவம் ! புதிய அழகு !

தென்றல் : : சென்னை-6

★——★

ஒண்டிப்புதூர்

ஒண்டிப்புதூர் : தி. மு. கழகச் சார்பில் 3-3-56 ந் தேதி நடந்த பொதுக்கூட்டத்தில் குருகூர் தோழர் இராஜாமணி, திருமலையம்மாள் ஆகியவரின் புதல்விக்கு கண்ணகி என்று பெயர் சூட்டிய தன் நினைவாக தென்றல் வளர்ச்சிக்கு ரூபாய் 1-0-0 ஆசிரியர் கண்ணதாசன் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

—வரப்பெற்ருேம் நன்றி.

★——★

ஒண்டிப்புதூர் அண்ணு படிப்பகத்தின் சார்பாக ஆசிரியர் கண்ணதாசன் வசம் 3-3-56-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தென்றல் வளர்ச்சிக்காக 64 காலணுக் கோண்ட முடிப்பு ஒன்று கொடுக்கப்பட்டது.

—வரப்பெற்ருேம் நன்றி.

★——★

கண்ணதாசன் முகவரி

கண்ணதாசன்

33. மானகிரி பழனியப்ப செட்டியார் தெரு,
நா. புதூர் : : காரைக்குடி

★——★

வானெலியில் கண்ணதாசன்

ஆசிரியர் கண்ணதாசன், 19-3-56ம் தேதி பகல் 12 - மணிக்கு சென்னை வானெலியில் பேசுகிருர்.

பொருள் :
உற்பத்திக்கு உற்சாகம்
எளிய பாடல்கள்.

மனைவிக்கு... கணவர்க்கு...

— நாகமுத்தையா —

அன்புக் கமலா,

நீண்டநாள் ஓய்விற்குப் பிறகு, நீ எழுதிய கடிதம் வந்தது. அந்தக் கடிதம் உன் கருத்துக்களையும் அத்துடன் மகிழ்ச்சியையும்கூட அழைத்து வந்தது. உண்மையிலே அகமகிழ்கிறேன்.

'என்னை அல்லால் பிறிதொரு பெண்ணை ஏறெடுத்தும் பாரேன் என்று சொல்லிய நீங்கள் ஏன் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் திறமையை இழந்துவிட்டீர்கள்?' என்று எடுத்த எடுப்பிலேயே ஒரு கேள்வி கேட்டிருக்கிறாய். சரியான கேள்விதான். உன்னைப் பிரியும்போது வேறொருத்தியை நினைக்கவும் கூடாதென்ற திண்மையான உள்ளத்தோடு தான் இருந்தேன். உண்மையிலேயே உனக்குத் துரோகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உன்னைப் பிரியும் சமயம் கிடையவே கிடையாது.

'மனிதன் பிறவியில் நல்லவனே. சூழ்நிலையும் சுற்றுப்புறமும் வாழ்நிலையும் வசதியோடு அமையாவிட்டால் நல்லவன் கெட்டவனாக ஆகியே தீருகிறான்' என்று தமிழய்யா கந்தசாமி வாத்தியார் எனக்குச் சொல்லித் தந்ததுண்டு. அதன் உண்மை என் வாழ்வில் மெய்யாகி விட்டது.

கடல்கடந்து வேற்று நாடு வந்ததும் தனிமையை உணரத்தொடங்கினேன். ருசி கண்ட பூனை உறிப்பானை இருக்குமிடமெல்லாம் தாவித் தாவிச் செல்லுமாமே அதுபோலப் பெண்மையைக் கண்டபோதெல்லாம் என் உள்ளம் பேதலித்தது. மனைவியாகிய உன்னை விட்டு விட்டு நான் மட்டும் தனியாக வந்தது முட்டாள்தனம் என்பதை உணர்ந்தேன். உணர்ந்தும் என்ன செய்வது?

அந்நிலையில் - இந்த மாதிரியான சூழ்நிலையில் - நான் வாழ்ந்து வதியும் போதுதான் - அத்தத் தாசி என்னெதிர்ப் பட்டாள். பசப்புக்காரியின் வலையில் வீழ்ந்துவிட்டேன். குறிப்பாக இவள் வலையில் விழக் காரணம் என்ன தெரியுமா? உயரம், நிறம், தோற்றம் எல்லாம் உன்னைப்போலவே! ஆனால் குணம்......? உன்னெழில் தோற்றத்தை அவள் தன்னுடலில் ஒற்றிக்காட்டினாள். அவளே நீ; நீயே அவள் என்பதாக எண்ணினேன். ஏமாந்துவிட்டேன். அட்டை ரத்தத்தை அப்படியே உறிஞ்சிக் குடித்துவிடுமாமே, அதுபோல இந்த வேசிகள் செல்வத்தை உறிஞ்சிக் குடித்துவிடுவார்கள். ஆம்! இவர்கள் மனித உருவில் நடமாடும் பொல்லாத அட்டைகள்.

ஆழந் தெரியாமல் காலை விட்டுவிட்ட யானை ஒன்று முதலையின் பிடிக்கு ஆளாகித் தப்ப முடியாமல் 'அரி, அரி' என்று கத்தியதாம். அந்தச் சமயத்தில் ஆண்டவன் துணைசெய்து யானையைக் காப்பாற்றினானும். அதிலிருந்து ஆண்டவனுக்கு 'ஆபத்சகாயன்' என்ற பெயர் வந்ததாம். இது புராணக்கதை. நானும் ஆழந்தெரியாமல் காலை விட்டு விட்டேன். தப்பித்துக்கொள்ளத் தாரத்தை உதவிக்கு அழைக்கிறேன். கைகொடுத்துக் காப்பாற்றி 'ஆபத் சகாயள்' என்ற பெயரை ஏன் சூடிக் கொள்ள மறுக்கிறாய்? 'என்னை மன்னித்துவிடு.' இதுதான் என் வேண்டுகோள். என் வேண்டுகோளை இம்முறை நிச்சயம் அங்கீகரிப்பாய் என நம்புகிறேன். நமபலாந் தானே? தலைவனைப் பிரிந்த தலைவியின் கைவளை சோர்ந்து கீழே விழுந்து உடைந்து போவதையும், காலணி கழன்று கீழே நழுவிவிடுவதையும் தமிழாசிரியர் கந்தசாமி வாத்தியார் சொல்லித்தரும்போது நான் ரசனையோடு கேட்டு மகிழ்ந்ததுண்டு. பாவம், அத்தலைவியர் கொண்ட துன்பத்தை, உணராது கவிதையின் இன்பத்தை மட்டும் அனுபவித்தேன் அப்போது. ஆனால், இப்போது இப்பழந்தமிழ்ப் பாடல்களின் உண்மையை முழுப்பொருளோடு உணர்கிறேன். இல்லை எனக்கு நீ உணர்த்தி வருகிறாய்.

தலைவியை விட்டு நகை (அணி) பிரியப் பிரிய தலைவனை நகை (எள்ளனம்) கவ்விக் கொள்ளுகிறது. நான் வேசியோடு வாழ்கிறேன். அல்ல வாழ்ந்தவன் என்பதைக் கண்களால் எனக்கு உணர்த்திப் பிறர் என்னை நோக்கி நகைப்பதைக் காணும்போது நான் படும் பாடு......! 'தாளப்படுமா? தணிபடுமா?' என்று பாடத்தோன்றுகிறது பிறமக்களின் இந்த எள்ளன நகை......பசும்பொன் நகை கழன்றும் நழுவி விழுந்து தொலைவதை விடத் தொல்லை தர வல்லது என்பதை இப்போது அனுபவிக்கிறேன்.

நாலடியாரில் இதுமாதிரியான பாட்டு ஒன்று இருக்கிறது. இது என் நினைவில் ஊறிக் கசப்பெடுக்கிறது. கீழே காண்பதுதான் பாடல்:

ஆமாபோல் நக்கி அவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோல் குப்புறூஉம் சில்லைக்கண் அன்பினை
ஏமாந்து எமதென்று இருந்தார் பெறுபவே
தாம்ஆம் பலரால் நகை.

காட்டுப் பசுவைப்போல நக்கித் தம்மைத் தேடிவந்தாரின் செல்வத்தைப் பறித்துக் கொண்டு காட்டு எருதுபோலக் குப்புறுகின்ற வேசிகள் காட்டுகிற விலங்கினும் கீழ்த்தரமான அன்பைப் பெரிதென்றும் நிசமென்றும் கருதி இறுமாந்திருப்பவரை எல்லோரும் எள்ளி எள்ளிச் சிரிப்பார்கள் என்பது பாட்டின் பொருள்.

இதை உணர்ந்திருந்தும்......ஆம்! ஆழந் தெரிந்தும் காலைவிட்டு விட்டேன். கவலைப்படுகிறேன். கண்ணீர் துடைக்க மறுக்காதே. இதோ நொடியில் வந்து சேர்கிறேன். பொறுத்தருள்.

உன்னன்புள்ள,
மாவண்ணன்.

— தமிழ்மாறன் —

அன்புள்ள அத்தான்,

நான் மன்னிப்பது திண்ணமென்ற அசையாத நம்பிக்கை கொண்டு ஆறுவது கடிதமும் எழுதிவிட்டீர்களே! எவ்வளவு குறும்புத்தனம் உங்களுக்கு? எவ்வளவு துணிவிருந்தால் நீங்கள் இப்படி எழுதுவீர்கள்?

தாங்கள் வேசியர் உறவை யாசித்துப் பெற்றதுடன் நிற்காமல் 'அவளையும் ஏற்றுக்கொள்' என்று மனங்கூசாது, சொல்லாமல் சொல்லி எழுதியிருக்கிறீர்கள். 'தான் கெட்டால் தன் தங்கையுமா கெடவேண்டும்', என்று ஒரு பழமொழி கேள்விப்பட்டிருப்பீர்கள். நீங்கள்தான் கெட்டீர்கள். உங்களைத்தான் அவள் கெடுத்தாள் கெடுத்த அவளை எப்படி அத்தான் நான் மனம் விரும்பி ஏற்றுக்கொள்வது? அவள் விலைமாதாக இல்லாவிட்டால் என் சகோதரி என்றாவது ஏற்றுக்கொள்ளலாம். சகோதரியாயிருந்தாலும் என இன்பத்தில் பாதியை அனுபவிக்க வந்தால் என மனம் எப்படித்தான் இடந்தரும்? இதை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.........

மோந்தால் வாடிவிடும் அனிச்சப்பூ, தொட்டால் துவண்டுவிடுவாள் துடியிடையாள் என்று தாங்கள் நம் முதல் இரவில் என்னைத் தொட்டு முத்தமிட்டு அணைத்ததெல்லாம் மறந்து தானே நிலைதவறி விலைமாதின் தலைவாயில் தண்டனிட்டீர்கள் காசில்லாதவன் கடவுள் ஆனாலும் கதவைச் சாத்திமூடக் கூசமாட்டார்கள். அவர்கள், என்பதை இப்பொழுதாவது உணர்ந்துகொண்டீர்களா, அத்தான்? திருமணம் நடந்த அன்று ஏற்பட்ட நாணத்திரை, நான் தங்களைக் கூடும்பொழுது எப்பொழுதும் என்னிடம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். டலரைத் தழுவி, உணர்ச்சியற்று, அறுத்தெடுத்த மரக் கட்டை போன்ற விலைமாதரிடம் நீங்கள் காணும் சுகம்தான் இனிமையாக இருக்கிறதா? எனத்தான் தங்கத்திலே யிருக்க வேண்டிய வைரத்தைப் பித்தளையிலே வைத்தால் வைரம் சிறப்படைய முடியுமா? பித்தளையிலே வைரம் பதித்தவர்களைப் பைத்தியமென்று சொல்லுவதைவிட வேறு சிறப்பான வார்த்தையுமேது? வைரத்திற் சிறந்த கோகினூர் வைரம் அல்லவா நீங்கள்? தங்கமாய் நானிருக்க, பித்தளையை நத்துவதேன் அன்பரே? தமிழ்ச் சங்கமாய் நானிருக்க புல்லுருவிக் கூட்டத்திடம் போனதுவும் எனத்தான்? எனைப் பிரித்து என் இன்ப வாழ்வில் கோடரி கொண்டு பிளக்கவா?

என் உள்ளத்தில் மெல்ல ஒலிக்கும் விரகதாபம் உங்களுக்கு எப்படித் தெரியும்? 'காலை அரும்பி, பகலெல்லாம் போதாகி, மாலை மலரும்' என் காதல் நோயைப்பற்றி நீங்கள் கொஞ்சமாவது எண்ணியது உண்டா? ஒவ்வொரு நாளும் வரும் மயக்கும் மாலைப் பொழுதை நினைத்தால்......அப்பப்பா!...போதும் பெண்ணாகப் பிறந்து, பருவம் வந்து, ஒருவரைக் கைப்பிடித்து, அவரின் பிரிவால் படும் துன்பம் போதும், போதும் என்றாகிறது. பாழும் மாலைக் காலத்தை நினைக்குந் தொறும், நினைக்குந்தொறும் பழந்தமிழ்ப் பாடலில் குறுந்தொகைக் காட்சி ஒன்று என் கண் முன்னர் தோன்றுகிறது.

''மாலைப்பொழுது. துன்பத்தை அளிக்கக் கூடிய மாலைப்பொழுது. கதிரவன் மறைந்தான். வானம் செக்கர் வானமாகியது. முல்லை மலர்ந்தது. ஆகையால் வந்தது மாலையென்று வேலையற்றோர், தெளிவுத் திறனற்றோர் கூறுவர். கணவனைப் பிரிந்த மனைவிக்கு அது மட்டுமல்ல மாலைப்பொழுது. குடுமிக் கோழி கூவுகின்ற விடியற்காலையும் மாலை தான். நண்பகலும் மாலைதான். எல்லாப் பொழுதும், நாள் முழுவதுமே மாலைப்பொழுதுதான்,'' என்று தலைவி மனம் வெதும்பிக் கூறுகிறாள். அதைப் புலவன் வாயிலாகக் கூறுகிறேன்:

மாலை என்மனார் மயங்கி யோரே;
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை
பகலும் மாலை துணையி லோர்க்கே

ஆகையால் அத்தான் இனியாவது தெளிவடைவீர்கள் என்று நம்புகிறேன். இனிவரும் மாலையை என்னால் தாங்கமுடியாது. 'வழுக்கி விழுந்தவர்கள், வாழ்க்கையைத் திருத்தியமைக்கும் திறனுடையோர்' என்று என் மனம் திடமாக எண்ணுகிறது. ஆகையால் தாங்கள் நடந்ததை மறந்து இனிவரும் மாலையை நம் வாழ்வின் புதுச்சோலையாக்க வருவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

அன்றிலே! எம்போல் வாழத்திறம் இன்றிலை யுனக்கு எனக் கூறி ஒன்றின காதலராய் வாழ்வாங்கு வாழ வந்திடுக என் அன்பே! தயங்காது வந்திடுக! வாராது போனால் இனிநாள் வாழேன்.

அன்புள்ள
கமலா.

19

"வந்தது வந்துவிட்டது; இனி என்ன செய்யமுடியும்? ஏதோ பார்ப்போம்" என்று எண்ணித் தெளிந்திருந்தாள் இந்திரா. பொழுது செல்லச்செல்ல, அவளுக்குத் தன்னைப்பற்றிய கவலை முழுக்க மறைந்தது. சுந்தரத்தின் திருமணச் சங்கதி பற்றிய பேச்சு அவள் உள்ளத்தை வடிகாலில் தங்கிய மீன்போலக் குதிக்க வைத்தது.

"பெண் பார்க்க எப்போது போவது?" என்று ஆசையும் மழலையும் தொனிக்கக் கேட்டு வைத்தாள் இந்திரா.

"இன்னிக்குச் சாயந்தரம் போரதாத்தான் இருக்கு" என்று பதில் சொன்னாள் மங்கையர்க்கரசி.

தோளிலே துணியைப் போட்டுக்கொண்டு அந்த வழியாகக் குளிக்கப் புறப்பட்ட சுந்தரம் இந்தப் பேச்சில் கலந்துகொண்டான். "என்னமோம்மா! நீ பாத்துசரின்னு சொன்னாத்தான் திருமணம்! இல்லை ... ஆயுள் காலப் பிரம்மசாரி தான்!" என்றான். பெருமிதம், இந்திராவைத் தலைகுனிய வைத்தது! மெல்லச் சிரித்தாள்.

இந்திரா, "பெண், பெயர் என்னவாம்?" என்று கேட்டாள். மங்கையர்க்கரசி, கையையும் தலையையும் ஆட்டி, மோன நிலையில் பெண்ணின் பெயரைத் தேட ஆரம்பித்தாள். பளிச்சென்று, "வெண்ணிலா!" என்றான் சுந்தரம்.

"வெண்ணிலா! நன்றாய்த்தான் இருக்கிறது" என்றாள் இந்திரா. பாவம்! அவள் கருப்பு நிலா! இப்போது தனி அறைக்குள் 'தவம்' புரிந்து கொண்டிருந்த சின்னப்பர், திருவாய் திறந்து மொழிந்தார்: "இந்தக் காலத்துப் பேரும்மா அது! இப்பத்தான் பேர் வைக்கிறதுலேயே புதுமை வந்துட்டுதே!" மங்கையர்க்கரசி சிரித்தாள். சின்னப்பர் என்றும் புதுமைப் பெண்களின் விரோதியல்ல. எனினும் இதுமாதிரி 'குத்தல்' பேசுவதில் சில பேருக்கு ஆசை இருப்பதில்லையா? அந்த பாணியில் தான் அவரும் பேசினார்.

"வெண்ணிலான்னு பேர் வச்சிருக்காங்க; நல்ல சிவப்புன்னும் சொல்றாங்க. நீ போய்ப் பாத்தாத்தான் அது என்ன நிலான்னு தெரியும்!" என்று விளக்கம் கூறிவிட்டு, ஒரு புதிரையும் போட்டுவிட்டு வெளியேறினான் சுந்தரம்.

கையிலே சாவியோடு வந்து, "அக்கா! அத்தானுக்கு காபி" என்றாள், கமலம். தான் வாங்கப் போன இந்திரா, ஏதோ நினைத்தவளாய், "நீயே கொண்டு போய்க் குடு" என்றாள். கமலம் தயங்கினாள். அனுவசியமான நாடகங்களுக்கு அங்கம் அமைக்க அவள் தயாராயில்லை. மங்கையர்க்கரசி, கமலத்தைப் பார்த்து, "ஏண்டி நிக்கிறே! சும்மா கொண்டுபோய்க் குடு" என்றாள். கமலம் தலைகுனிந்தவாறு, பாலன் இருந்த அறைக்குள் நுழைந்தாள். பாலன் அப்போது 'பொன் மொழி'களில் மூழ்கிக் கிடந்தான். பெரிய மனிதர்கள், உலகம்பற்றியும் வாழ்வுபற்றியும் என்னென்ன உதிர்த்திருக்கிறார்கள் என்கிற ஆராய்ச்சியில் அவன் ஆழப் பதிந்திருந்தான். சராசரி மனிதனுக்கு நல்ல நண்பர்கள், பெரிய மனிதர்களின் பொன்மொழிகள் தான். கமலம், "காபி" என்றாள். பாலன் திரும்பிப் பார்த்தான். "வச்சிட்டுப் போ!" என்றான். கமலம் காபியை மேஜைமேல் வைத்துவிட்டு வெளியேறினாள். திரும்பி, பொன் மொழியைப் பார்த்த பாலனின் கண்களில் ஒரு விசித்திரமான வாக்கியம் தட்டுப்பட்டது. அது இது:

"தன் இருதயத்தை நம்புகிறவன் உலகத்தை நம்பலாம்."

அவனைப் பொறுத்தவரையில் அவன் தன்னுடைய இருதயத்தை நம்புகிறான். ஆனால் அவனது இருதயம்தான் அவனை அனுசரிக்க மறுக்கிறது. பாலன் அடுத்த வரியைப் படித்தான். அங்கே, "**அழகு கண்களில் இல்லை; இருதயத்தில்தான் இருக்கிறது**" என்று இருந்தது. பாலனுக்கு அது தெரியும்; ஆனால் இருதயத்திலிருக்கிற அழகு ஏன் கண்களைக் கரிக்க வைக்கிறது? கண்களின் அபிப்பிராயத்தை ஏன் இருதயம் அப்படி அப்படியே ஏற்றுக்கொள்கிறது?—இதுதான் பாலனுக்குப் புரியவில்லை—பாலன் புத்தகத்தை மூடினான். எழுந்து காபிக் கோப்பையைக் கையில் எடுத்தான். கமலம் கொடுத்த காபி; கமலம் தொட்ட கோப்பை—இந்த எண்ணத்திலேகூட அவனுக்கொரு சுகமிருந்தது; சுவை இருந்தது. காபியை ஒருவாய் குடித்தான். முகம் சுருங்கிற்று. காபி ஒரே கசப்பு. மனதுக்கு வேண்டியவர்கள் எடுத்துக் கொடுத்தால் வேம்பும் கரும்பாகுமென்பார்கள். இங்கே வேம்பு வேம்பாகவே கசந்தது. ஆம் காபிக்குச் சர்க்கரை போடவில்லை. பாலன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "கமலம்! கமலம்!" என்று கூப்பிட்டான். கமலம் பயந்தபடியே வேதனையோடு "என்ன" என்றாள். "கசக்கிறது" என்றான் ரத்தினச் சுருக்கமாக. கமலம் தன் கையைக் கடித்துக் கொண்டாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட இந்திரா உடனே எழுந்து அடுப்பங்கரைக்கு ஓடினாள். சர்க்கரைச் சீசாவை எடுத்துக் கமலத்தின் கைகளில் கொடுத்து "கொண்டு போய்க் குடுடீ" என்றாள். கமலம் வாங்கிக் கொண்டு நடந்தாள். "காபி போடும்போது அதில் சர்க்கரையும் போடுவது விதி" என்றான் பாலன் வேடிக்கையாக.

"போட்டதாக நினைவு. கலக்கிப்பாருங்கள்" என்றாள் கமலம், சுருக்கமாக.

கலக்கிவிட்டு ஒரு வாய் குடித்த பாலன், "உண்மையிலேயே சர்க்கரை போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றான் பணிவாக. கமலம் சர்க்கரைச் சீசாவை நீட்டி "அரை வீசை சர்க்கரை இருக்கிறது; வேண்டுமட்டும் போட்டுக் கொள்ளலாம்" என்றாள் கிண்டலாக.

உடனே பாலன், "இதைக் காபி போடும் போதே கவனத்தில் வைத்துக் கொள்வது நலம்" என்றான் குத்தலாக. அடுப்பங்கரையில் கமலத்திற்கு ஏற்பட்ட பயம் இப்போது எங்கேயோ போய்விட்டது.

"யோசனைக்கு நன்றி" என்று கூறிவிட்டுச் சிரித்துக்கொண்டே காபியைக் குடித்தான். இந்திரா இதைக் கவனித்தாள். "பாலன் மகிழ்ச்சியோடு இருக்கிறான்; காரணம், கமலம் அவன் கண்ணெதிரே இருக்கிறாள்"—பளிச்சென்று இந்த எண்ணம்தான் வந்தது இந்திராவுக்கு. அவள் வருத்தப்படவில்லை; கமலத்தின் மீது கோபப்படவுமில்லை. பாலன் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

"எப்படி இருந்தது காபி?" என்றாள் ஏதும் அறியாதவள் போல.

"கமலம் போட்டது; எப்படி இருக்கும்?" என்று கேள்வி உருவத்தில் பதில் கொடுத்தான் பாலன். இந்திரா சிரித்தாள்; ஆம், அதைச் சிரிப்பு என்றுதான் பாலன் நினைத்தான். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் வேதனைப்படும் நிலைமை, மனிதர்களுக்குமட்டும்தான் வருகிறது. இதுமாதிரி நேரங்களில் ஆடுமாடுகளில் ஒன்றாகப் பிறந்திருக்கக் கூடாதா என்ற எண்ணங்கூட மனிதர்களுக்கு ஏற்படுகிறது. இந்திராவுக்கு அந்த எண்ணம் வரவில்லை. ஆனாலும் தன்னைப்பற்றிய தாழ்வு மனப்பான்மையில் அவளுக்கு வேதனை பிறந்தது. அதை வெளிப்படுத்தாமல் "இன்னும் கொஞ்சம் கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்றாள். "போதும்" என்று சொன்ன பாலன், புத்தகத்தை எடுத்துக் கட்டிலைத் தட்டியபடியே அமர்ந்தான்.

"குளிக்கவில்லையா?" என்று கேட்டாள் இந்திரா.

"குளிக்கணும்" என்று சுவையின்றிப் பதில் சொன்னான் பாலன்.

"என்ன குளிக்கனும்! ஆண்டுக்கொரு முறையா? ஆறு மாதத்திற்கு ஒரு முறையா?" என்று கேலி பேசிக்கொண்டே உள்ளே நுழைந்தான் சுந்தரம்.

பாலன் கிண்டலாக, "நீ இன்றைக்குக் குளித்துவிட்டாய்; அதனாலே பேசுகிறாய்! எனக்கல்லவா தெரியும் உன் சங்கதி! தொடர்ந்து, ஒன்பது மாதம் பதினாறு நாட்கள் குளிக்காமலிருந்திருக்கிறாயே! அந்தக் கதையைச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

சுந்தரம் பாலனை ஆச்சரியமாகப் பார்த்தான். தேதி, கிழமை, மணியோடு கச்சிதமாகச் சொல்லிவிட்டால், பொய்க்கு உண்மையின் உருவம் வந்து விடுகிறது. உலகத்துப் பொய்களின் தந்தையரான எழுத்தாளர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆம், பாலன் எழுத்தாளன்! ஒருவரை வாழவைக்க அதிகாரம் படைத்த அரசாங்கத்திற்குப் பலகாலம் பிடிக்கலாம். உண்மையான காதலர்கள் ஒன்று சேருவதற்குத் தாண்ட முடியாத ஆயிரம் தடைகளிருக்கலாம்; நல்லவர்கள் உயிர் வாழ்வது நாட்டு நடப்பில் கடினமாகவே இருக்கலாம்; ஆனால் நாற்காலியில் உட்கார்ந்தபடியே ஒருமணி நேரத்தில் பேனா முனையின்

லேயே அத்தனைக்கும் வாழ்வளித்து விடுபவன் எழுத்தாளன்! எழுத்தாளனது கதாபாத்திரம் ஆஸ்த்மா வியாதியில் அவதிப்பட்டாலும் இறுதியில் அவன் விரும்பினால் அந்த நோயைத் தீர்த்துவிடுவான். ஆனால் உலகத்திலே ஆஸ்த்மாவுக்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை! இத்தகைய 'சர்வ வல்லமை பொருந்திய' எழுத்தாளச் சாதிக்குப் பாலனும் ஒரு வாரிசு.

சுந்தரம் இதைச் சொல்லிக் காட்டி, "நீங்கள் என்ன சொன்னாலும் அது உண்மையாகி விடுகிறதப்பா. உலகம் உருப்பட்டதும் உருப்படாமற் போனதும் உங்களாலேதான்" என்றான்.

பாலன் பதில் சொல்லுவதற்கு முன்னாலேயே சுந்தரம் தானே ஒரு திருத்தம் கொண்டு வந்தான்—

"உலகம் உருப்பட்டதற்கு வேறு எழுத்தாளர்கள் காரணமாக இருக்கலாம்; ஆனால் உருப்படாமற் போனது உன்னாலேதான்" என்றான்.

பாலன் இப்போது உண்மையிலேயே சிரித்தான். நம்மைத் தாக்குவதாகவே இருந்தாலும் நல்ல நகைச் சுவையாயிருந்தால் அது நம்மையும் சிரிக்கவைக்கும். சிரித்தபடியே பாலனும் ஏதோ பதில் சொல்லி வந்தான். சுந்தரம் இடைமறித்து, "போதும் போதும்! பதில் சொல்லாதே! மூக்கைத் துடைத்துக் கொள்! மூக்கு உடைந்து முக்கால் மணி நேரமாகிவிட்டது" என்றான்.

பாலன், "சரி சரி இதே மாதிரி உன் மூக்கையும் உடைக்கிறேனா இல்லையா பார்!" சபதம் செய்தான்.

இந்திரா சிரித்தாள். மாமியார் வீட்டில் இருந்து கொண்டு மாப்பிள்ளை, மைத்துனனைக் கேலி செய்வதில், அடடா! எவ்வளவு சுகமிருக்கிறது! அப்போது மனைவியும் பக்கத்தில் நின்றுவிட்டால் பொழுது இப்படியே போகக் கூடாதா என்று தோன்றும்.

பாலன் மனதில் இந்திராவுக்கு அவ்வளவு நெருக்கமான இடமில்லை என்றாலும் கதவிலே சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்த அவளது புனிதமான தோற்றம் அவனது மனதில் அமைதி கலந்த அன்பை ஊட்டி வைத்திருந்தது. அந்த நேரத்தில் கமலமும் உள்ளே வந்து சேர்ந்தாள், கோப்பையை எடுத்துப் போவதற்காக. பாலன் அவளையே கண் கொட்டாமல் பார்த்தான். இந்திரா சாடையாக அதையும் கவனித்தாள். கமலம் சென்றுவிட்டாள். அப்போது அலமாரியிலிருந்து ஒரு வேட்டியை எடுத்து விரித்தான், சுந்தரம். அந்த வேட்டிக்குள்ளிருந்து ஒரு ரவிக்கை கீழே விழுந்தது. பாலன் அதைப் பார்த்துத் துள்ளிக் குதித்து "ஆகா இது ஏது, கல்யாணத்துக்கு முன்னடியே ரவிக்கை! சபாஷ்! காதல் கல்யாணமா? அதற்குள் ரவிக்கைக்கு அளவெடுத்து வாங்கியாகிவிட்டதா? இனி எதற்காகப் பெண்ணைப் போய்ப் பார்ப்பது? அதுதான் ரகசியப் பேச்சு வார்த்தைகூட நடந்திருக்கும் போலிருக்கிறதே!" என்று சொல்லிவிட்டு இந்திராவின் முகத்தைப் பார்த்தான் இந்திரா ஆச்சரியத்தோடு சுந்தரத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

"சிச்சீ! சலவைத் தொழிலாளி தவறுதலாக் கொண்டு வந்திருக்கிறான். இது யாருடைய ரவிக்கையோ என்னவோ! எனக்குத் தெரியாது" என்றான் சுந்தரம் திகைப்போடு.

"வேட்டி உன் வேட்டி தானே!" என்று கேட்டான் பாலன்.

"ஆம்!" என்றான் சுந்தரம் அசடு வழிய.

"அப்படி யென்றால், வேறு ரவிக்கை அதற்குள் எப்படி வரும்? இது ஏதோ மர்மம்தான். ஒரிஜினல் ரவிக்கையா... இல்லை..." என்று இழுத்தான் பாலன்.

"சேச்சே! என்ன ஆளப்பா. நீ! அப்படியே காதலிருந்தாலும் ரவிக்கையையா வாங்கிக் கொண்டு வருவேன்!"

"யார் கண்டது! ஆனந்த உலகத்திலே பறந்திருப்பீர்கள். கலிங்கத்துப் பரணியிலே, இன்பத்தில் திளைத்த ஒருத்தி நிலவொளியைச் சேலை என்று எடுத்து உடுத்தினாளாமே, அது மாதிரி, பொழுது விடிவதற்கு முன்னால் புறப்பட வேண்டுமே என்று அவசர அவசரமாக எழுந்திருப்பீர்கள். உன் சட்டையை அவளும், அவள் ரவிக்கையை நீயும் மாற்றிப் போட்டுக்கொண்டிருப்பீர்கள். வீட்டுக்கு வந்ததும் உனக்கு விபரம் புரிந்திருக்கும். கழற்றி மடித்து அலமாரியில் வைத்திருப்பாய். இல்லை... இப்படித்தான் நடந்ததா? அல்லது, இதே மாதிரி வேறு கதை...?" என்று இழுத்தான் பாலன்.

சுந்தரம் ஏதோ பதில் சொல்ல வந்தான். பாலன் இடைமறித்து "போதும்! போதும்! மூக்கைத் துடைத்துக்கொள்! மூக்கு உடைந்து முக்கால் மணி நேரமாகிவிட்டது" என்றான். சுந்தரம் தலை குனிந்தான். இந்திரா "எழுத்தாளர் எழுத்தாளர் தான்! பதிலுக்குப் பதில் சொல்லிவிட்டார்" என்று பெருமைப்பட்டுக் கொண்டாள்.

சுந்தரம் இந்தக் கற்பனைப் பின்னலிலிருந்து விடுபட்டுக் கொண்டு, "இது எப்படி வந்ததென்று தெரியவில்லையே? இது எப்படி வந்தது என்று தெரியவில்லையே?" என்றான், மாறி மாறி.

பாலன் அதைப் பறித்துக் கொண்டு முகத்திற்கு முன்னால் நீட்டியபடி, "ஏ, ரவிக்கையே, நீ வசிக்கும் இடம் எது! இங்கே எப்படி வந்தாய்? உன் தலைவி உன்னைத் தூதனுப்பினாளா? சங்கதியைச் சொல் என் தங்கமே!" என்றான்.

இந்த வேடிக்கைப் பேச்சும் சிரிப்பொலியும் கமலத்தின் காதுகளில் விழ, அவள் சன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். பார்த்தவள் திடுக்கிட்டாள். "அக்கா! அக்கா! என்று அழைத்தாள். இந்திரா அறையைவிட்டு வெளியே வந்தாள்.

"அத்தான் வைத்திருப்பது என் ரவிக்கை அக்கா" என்றாள் கமலம்.

இந்திரா திடுக்கிட்டு உள்ளே ஓடி பாலனின் கையிலிருந்த அந்த ரவிக்கையைப் பறித்துக் கொண்டு, "இது கமலத்தின் ரவிக்கை" என்று கூறியபடியே வெளியேறினாள்.

பாலன் மேனி சிலிர்த்தது.

"பார்த்தாயா! சலவைத் தொழிலாளி எல்லா உருப்படிகளையும் ஒன்றாகச் சேர்த்து மடித்திருக்கிறான். அதனால் நேர்ந்ததுதான் இந்தத் தவறு. இப்போதாவது புரிந்து கொள்!" என்றான் சுந்தரம்

பாலன் சிரிக்கவில்லை. அவன் இப்போது வேறு உலகில் பிணைந்திருந்தான்.

சுந்தரம் தலை வாரிக்கொண்டு வெளியிலே வந்து, "இலை போடுங்கள்; நேரமாகிவிட்டது" என்றான்.

இலைகள் போடப்பட்டன. கமலம் பரிமாறினாள். எல்லோரும் சாப்பிட்டார்கள். பாலன் அரைகுறையாகச் சாப்பிட்டு முடித்தான்.

மூன்று மணி சுமாருக்கு இரண்டு வாடகைக்கார்களில் எல்லோரும் ஏறிக் கொண்டு பெண் பார்ப்பதற்காகக் கோட்டையூர் வந்து சேர்ந்தார்கள். பெண் வீடு அன்று திருமண வீடுபோலவே காட்சியளித்தது. மேலைச் சிவபுரியிலிருந்து சொக்கப்பரும் முன் கூட்டியே அங்கு வந்திருந்தார். எல்லோருக்கும் பலகாரம் செய்திருப்பதாகவும் சாப்பிட வேண்டுமென்றும் பெண்ணின் தந்தை முன்னாலேயே வேண்டுகோள் விடுத்தார். மங்கையர்க்கரசியும் சின்னப்பரும் அதைக் கண்டிப்பாக மறுத்துவிட்டனர். நிச்சயதார்த்தம் முடிவதற்கு முன்; பெண் வீட்டில் சாப்பிடக் கூடாதாம்; சாப்பிட்ட பிறகு கல்யாணப் பேச்சு முறிந்துவிட்டால் நன்றாயிருக்காதாம்!-மறுத்ததற்கு சின்னப்பர் சொன்ன காரணம் இதுதான். பேச்சு முறிவதற்கு நியாயமே இல்லை என்றும், சாப்பிட்டுத்தான் ஆகவேண்டுமென்றும் பெண் வீட்டார் வற்புறுத்தினார்கள். சொக்கப்பரும் அவர்களோடு சேர்ந்து வற்புறுத்தினார். "சரி; பெண்ணைப் பார்த்துவிட்டு பிறகு சாப்பிடுவோம்" என்றார் சின்னப்பர். இந்திரா தானே முக்கியமாகப் பார்க்க வேண்டும்? அதற்காக இந்திராவை உட்கார வைத்துக் கொண்டு பெண்ணைக் கூட்டி வந்தார்கள்; இந்திராவுக்கெதிரே உட்கார வைத்தார்கள். இந்திரா பார்த்தாள்—அழகு வடியும் இளம் பெண்; சுண்டினால் ரத்தம் தெறிக்கும்; அவ்வளவு சிவப்பு; மின்னல் இடை என்று சினிமாவில் வர்ணிப்பார்கள்-ஆனால் அதில் வரும் கதாநாயகிக்குக் குந்தாணி இடை இருக்கும். ஆனால் இந்தப் பெண்ணுக்கு உண்மையிலேயே மின்னல் இடைதான். இந்திரா அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "உன் பெயர் என்ன அம்மா?" என்று கேட்டாள்.

"சாரதை" என்று தலைகுனிந்தபடியே மெல்லச் சொன்னாள், அந்த மென்மொழியாள்! இந்திரா சிரித்துவிட்டுத் தாயைப் பார்த்துச் சாடையாகத் தலையாட்டினாள். "பரம திருப்தி" என்பது போலிருந்தது அது. பிறகு, பேசி முடித்துக்கொள்வதென்று தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தோடு எல்லோரும் பலகாரம் சாப்பிட அமர்ந்தார்கள். சாப்பிடும்போது இந்திராவுக்குப்பக்கத்தில்உள்ளூர்க்காரி ஒருத்தி அமர்ந்திருந்தாள். இந்திராவையே பார்த்துக் கொண்டிருந்த அவள் பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்து போய்க்கை கழுவினாள். பெண்ணின் தாயிடம் போய் 'குசுகுசு' வென்று ஏதோ பேசினாள். சிறிது நேரத்தில் அந்த வீடு முழுக்க ஆங்காங்கே இரண்டு மூன்று பெண்களாகக் கூடி 'கசமுச' வென்று ஏதோ பேச ஆரம்பித்தார்கள். வெற்றிலை பாக்கு மாற்றிக்கொள்ளும் கட்டம் வந்தது. "நாள் பார்த்துவிடலாமா?" என்று கேட்டார் சின்னப்பர். அப்போது பெண்ணின் தாய் ஓடிவந்து, பெண்ணின் தந்தையிடம் ஏதோ ரகசியம் பேசினாள். உடனே சின்னப்பரின் கேள்விக்கு மென்று விழுங்கலானார் பெண்ணின் தந்தை! "கொஞ்சம் யோசிக்கலாம்" என்று இழுத்தார். சுந்தரம், பாலன், சின்னப்பர் எல்லோருமே திடுக்கிட்டார்கள். "என்ன இந்த இழுப்பு?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டார் சின்னப்பர். பெண்ணின் தந்தை பதில் சொல்லவில்லை. அதற்குள் மங்கையர்க்கரசி ஆத்திரத்தோடு அங்கே வந்தாள். சின்னப்பரைப் பார்த்து, "வாருங்கள் போகலாம்! இவர்கள் சம்பந்தமே தேவையில்லை!" என்று பதறினாள்.

குழம்பிய சின்னப்பர் கொஞ்சம் துணிவுடனேயே, "என்ன நடந்தது? விஷயத்தைச்சொல்லு! ஏனிப்படிப் பதறுகிறாய்? இங்கேயும் சண்டைதானா?" என்றார்.

"சண்டையுமில்லை; வம்புமில்லை! ஒருத்தருக்கொருத்தர் 'குசுகுசு'ன்னு பேசிக்கிறாங்க. இந்திராவுக்குக் குஷ்டமாம்! அவ இருக்கிற வீட்டிலே எப்படிப் பெண்ணைக் கொடுக்கிறதுன்னு யோசிக்கிறாங்களாம்; இந்தப் பெண்ணு இல்லேன்னா, ஊரிலே நாட்டிலே ஆயிரம் பொண்ணு இருக்கு, வாங்க, போகலாம்" என்றாள். சுந்தரத்தின் தலையில் சம்மட்டி கொண்டு அடிப்பது போலிருந்தது. பாலனின் மேனி வியர்த்தது. இந்திரா அங்கேயே அழ ஆரம்பித்தாள். மணப்பெண்ணாக வேண்டிய சாரதை, மதுரையை எரித்த கண்ணகி போல் எழுந்து நின்றாள். சுந்தரமும் எழுந்து நின்றான்.

தொடரும்

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்—

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம். ஏ., எல். டி.

மேனாட்டு நகராகிய இலண்டனிலே ஒரு தமிழ்க்கழகம் திரு. ஆர். கே. சண்முகத்தை வரவழைத்துப் பெருமைப்படுத்திற்று. சிலம்பின் ஆர்வலர் அங்கே சிலம்பின் பெருமை பற்றிப் பேசியிருப்பார் என்று எதிர்பார்ப்பது இயல்பு. அந்தச் சூழலில் சிலம்பின் பெருமையினைப் பேசவேண்டிய இடம் அது. சிலம்பைப் பற்றிப் பேசாமல் அவர் பேசியதென்ன? ஆங்கிலங் கலந்து தமிழர் பேசக்கூடாது என்று அறிவுரை கூறினார். ஆங்கிலமே கிட்டத்தட்டத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவரிடம் இது பெருந்தன்மையான கூற்றே. ஆனால் அடுத்து அவர் அறிவுரை பிறமொழி வெறுப்பு ஆகாது, பிறமொழிச் சொற்கள் கலக்காமல் எழுதும், பழக்கம் பேசும் பழக்கம் தீது என்பது.

நாகரிகத்தில் மேலோங்கிய ஆங்கிலம் கலத்தல் தவறு, பிற்போக்காளர் கோட்டையாகிய சமஸ்கிருத மொழியும் அது சார்ந்த இன ஆதிக்க மொழிகளும் கலத்தல் இனிது என்பது அவர் இலண்டனில் பரப்ப விரும்பிய கோட்பாடு.

இருவேறு அங்கங்கள் இணைப்பு

திரு. வையாபுரிக்கும் திரு. ஆர். கே. எஸ்ஸுக்கும் ஆங்கிலக் கல்வி, உலக மதிப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, அறிவாற்றல், கலையாராய்ச்சி அரிய துறைகளில் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை உண்டு. ஒருவர் தமிழகச் சூழலில் உள்ளவர். மற்றவர் உலக அரங்கம் ஏறியவர். ஒருவர் கம்பராமாயண ஆர்வலர், மற்றவர் ஆங்கில மொழி ஆர்வத்திலிருந்து சிலப்பதிகாரத்துக்கு ஓய்வு காலத்தில் இறங்கி வந்தவர். இருவருக்கும் உள்ள இணைப்பு வியப்பான ஒரு பொதுப் பண்பு — இருவரும் தாய்மொழி ஆர்வத் துடிப்பு உள்ளவர்கள் அல்ல. ஆர்வத் துடிப்பு உள்ள அச்சிலரை இருவரும் வேறினத்தார் என ஒதுக்கியவர்கள். அவர்களுடன் எண்ணெயும் தண்ணீரும்போல விலகிப் பழக்கப்பட்டவர்கள்.

போற்றும் சிலரை இங்ஙனம் ஒதுக்கியதன் காரணம் பெருங் கருத்து வேறுபாடாக இருக்கலாமா?

கருத்து வேறுபாடுகளின் இரு கோடி

கருத்து வேறுபாடு என்றால் ஆர். கே. எஸ். பதிப்புக்கு முன்னுரை தந்த திரு. வையாபுரிக்கும், மதிப்புரை அளித்த பேராசிரியர் வி. ஆர். ஆர். தீட்சிதருக்கும் ஏற்பட்ட எதிரெதிர் வேறுபாடு யாருக்கும் இருக்க முடியாது. இதைத் திரு. ஆர். கே. எஸ். முகவுரையே குறித்துள்ளது.

"இளங்கோ அடிகளைப்பற்றிச் சரித்திரசம்பந்தமான ஆதாரங்கள் இல்லை. அவர் இன்ன காலத்தில் இருந்தார் என்பதைப் பற்றிக் கூட ஆராய்ச்சியாளர்களுக்குள் அபிப்பிராய பேதம் உண்டு. திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களின் முன்னுரையிலும் திரு. இராமச்சந்திர தீட்சிதர் அவர்கள் மதிப்புரையிலும், இவ்விவரங்களைப் பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்களைக் காணலாம்."

திரு. வையாபுரி அவர்கள் குறிப்பிட்ட 'போற்றும் சிலரில்' திரு. இராமச்சந்திர தீட்சிதரும் ஒருவர்தானே என்று எவரும் ஐயுறத் தோற்றும். ஏனென்றால் கருத்து வேறுபாட்டில் அவருக்கு நேர் எதிர் கோடுவரை சென்றுள்ளவர் திரு. தீட்சிதர்.

அவர்கள் கருத்து வேறுபாடுகளைப் பார்ப்பவருக்கு இது விளங்கும்.

சிலப்பதிகாரம் சங்க கால நூலல்ல என்பது திரு. வையாபுரி கருத்து. அது சங்க கால நூலே என்பது திரு. தீட்சிதர் உறுதி. சிலப்பதிகாரம் சேரன் செங்குட்டுவன் இளவல் இளங்கோ எழுதியதே என்பது திரு. தீட்சிதர் கருத்து. இளங்கோ என்று ஒரு தம்பியே இருந்ததற்குச் சான்று கிடையாது என்று கருதுபவர் திரு. வையாபுரி. சிலப்பதிகாரம் கற்பனை கலந்த ஒரு வரலாறு என்பது திரு. ஆர். தீட்சிதர் கோட்பாடு; அது வரலாற்றுப் பூட்டைத் திறக்கப் பூசிய அழகிய கட்டுக் கதை என்பது திரு. எஸ். வையாபுரி அவர்கள் முடிவு.

இந்தக் கருத்து வேறுபாட்டுக் கோடிகளுக்குமிடையே இலக்கிய நயம் போற்றிய சிலம்பார்வலர்தான் திரு. ஆர். கே. சண்முகம்.

கண்கொள்ளாக் காட்சி

சிலம்பைப்பற்றிய வரை தமிழ் நாட்டில் எல்லாக் கருத்து வேறுபாடுகளுக்கும் உரிய முக்கூறான பிரதிநிதிகள் திரு. எஸ். வையாபுரி, திரு. ஆர். கே. சண்முகம், திரு. ஆர். தீட்சிதர் மூவரும் ஒரே நூலின் பாராட்டில், பதிப்பில் கலந்துகொள்ள முடிகிறது. ஒரே பதிப்பில் நட்புக் கெடாமல் அறிவுச் சிலம்பப் போட்டி நடத்த முடிகிறது. புலி ஒரு புறம், ஆடு ஒரு புறம், ஒன்றைக் கொன்று ஒன்றைத் தின்னும் மனிதன் நடுவே. மூவரும் ஒருங்கே இருந்து புல்மேயும் அதிசயக் காட்சியை இங்கே காண்கிறோம்!

போற்றும் சிலர் இந்த மூவருமில்லையென்றால் வேறு யார்? மூவர் கருத்துக்கும் அப்பாற்பட்ட வேறுபாடுடையவரா? மூவர் கருத்துக்களுக்குள்ளும் தான் வேறுபாடுகள் அனைத்துக்கும் பிரதிநிதித்துவம் ஏற்பட்டாய்விட்டதே!

தமிழக ஆராய்ச்சிப் போக்கின் புதிர் இத்தகைய புரியாச் சூழலில்தான் உள்ளது. அது எவ்வாறு சிலம்பின் புகழைப், பயனைப் பாதிக்கிறது என்று காண்போம்.

சிலப்பதிகாரத்தைப் போற்றும் திரு ஆர். கே. சண்முகம், இராவ் பகதூர் எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு. வி. ஆர். ராமச்சந்திர தீட்சிதர் ஆகியோர் எவ்வளவு வேறுபாடுடையவராயிருந்தாலும் அவர்களை ஒருமுகப்படுத்திப் 'போற்றும் சிலர்' என்று குறிக்கப்பட்டவரிடமிருந்து அவர்களைப் பிரிக்கத்தக்க ஓர் அடிப்படை இனப்பாகுபாடு இருக்கவேண்டும் என்பது இதனால் தெரிய வருகிறது.

அது யாது?

இது சிலப்பதிகார இலக்கிய நயம் பற்றியதன்று. மூவருமே அதை உச்சிமேற் கொண்டு போற்றுபவர் ஆவர்.

அது கால ஆராய்ச்சி பற்றியது. சிலப்பதிகாரத்தின் வரலாற்றுண்மை பற்றியது என்று கூறத் தோற்றும். ஏனெனில் பேராசிரியர் திரு. வே. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் ஆராய்ச்சிக்கு இராவ் பகதூர் எஸ். வையாபுரிப் பிள்ளை முன்னுரை தந்ததும், இராவ் பகதூர் கருத்துக்களைப் பேராசிரியர் மேற்கோள் காட்டியதும் இவ்வகையிலேயே.

திரு. ஆர். கே. எஸ். கால ஆராய்ச்சி, வரலாற்றுண்மை ஆகியவற்றில் கருத்தே செலுத்தவில்லை. இலக்கியநய ஆய்வுடனேயே நின்றார். ஆனால் திரு. வி. ஆர். ஆர். தீட்சிதர் கால ஆராய்ச்சியிலும் வரலாற்றுண்மையிலும் இராவ் பகதூருக்கும் பேராசிரியருக்கும் முற்றிலும் மாறுபட்டவர். ஆகவே கால ஆராய்ச்சி, வரலாற்றுண்மை ஆகியவை நீங்கலாக மேற்கூறிய மூவரையும் போற்றும் சிலரிடமிருந்து விலகி நிற்க வைக்கும் பண்பு இருக்கவேண்டும்.

ஓர் இன்பச்சேதி

—'தென்றல்' இலக்கியப் பரிசு பெற்ற நூல்களை வெளியிடவும்—
—பெரும்புலவர்கள், அறிஞர்கள், கவிஞர்களின் சிறந்த ஆராய்ச்சி நூல்களைத் தரவும்—
—பண்டைத் தமிழ் இலக்கிய நூற்களுக்கு, எளிய இனிய உரை-விளக்கம் தரவும்—
—அத்தனையும் குறைந்த விலையில் கிடைக்க வழிசெய்யும் எண்ணத்தோடும்—
துவக்கப்படுகிறது,

இலக்கியக் கழகம் லிமிடெட்

முதல் நூல் :

தமிழில்லையேல் உலகில்லை

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை,
எம். ஏ., எல். டி., இந்தி (விசாரத்)
— எழுதியது —

சித்திரை முதல்நாள் வெளிவருகிறது !

தலைவர் : ச. சொக்கலிங்கன்

விபரங்கட்கு :

இலக்கியக் கழகம் லிமிடெட்
33, மானகிரி பழனியப்பச் செட்டியார் வீதி,
நா. புதூர்,
காரைக்குடி, இராமநாதபுர மாவட்டம்

நூல் நயம்

கொய்யாக்கனி

வளர்ந்து வரும் தமிழ் இலக்கியப் பரப்பை அணி செய்வது காவியமே ஆகும். சங்ககாலப் புலவர்களைவிட எண்ணிக்கையிலும் எழுத்திலும் சிறந்தவர்களாக உருவாகி வருகிறார்கள் இன்றைய கவிஞர்கள். சங்ககாலத்தில்கூட கவிதைகளிலே - செய்யுள்களிலே பழமையின் உருவம் காணப்பட்டிருக்கலாம். ஆனால், புதுமையின் மெருகு காணப்படுகிறது தற்காலக் காவியங்களிலே. அத்தகைய புதுமை மெருகு கலந்த காவிய நூல் தான் கொய்யாக்கனி. இதனை எழுதிய துரை. மாணிக்கம் அவர்கள் இக்காவியத்தின்மூலம் தன்னைப்'பாரதிதாசன் பரம்பரையினர்' என்று நிலைநாட்டுகிறார். உண்மையிலேயே இக்காவியத்தில் சில இடங்களில் புரட்சிக் கவிஞரின் சாயலைக் காண்கிறோம். "கொக்கரிக்கும் நெஞ்சுக்குத் தணிவு கூறி" என்பது புரட்சிக் கவிஞரின் சொற்றொடர். "கமறுகின்ற நெஞ்சினுக்குத் தணிவு கூறி"-என்பது ஆசிரியரின் சொற்றொடர்.

பல பல உவமைகளை நூல் முழுதும் அள்ளித் தெளித்துள்ளார் ஆசிரியர். "தொத்தி வரும் கிளி தன்னைப் போ போவென்று தொங்குகின்ற பழக்குலைதான் கூற இலுண்டோ?" என்ற கருத்தும் சொற்றொடரும், இனிமையாகவும் அழகாகவும் பொருள் பொதிந்ததாகவும் இருக்கின்றன.

காவியக் கதையில் வரும் வில்லன் மன்னிக்கப்படுகிறான் "இன்னா செய்தாரை ஒறுத்தல் வேண்டும்" என்ற வள்ளுவர் கூற்றுப்படி. ஆனால் "அலைபோ அறிவோ அற்றவனொருவனைப் பண்புடையானாக்கப் பண்ணுதல் வீணே" என்று முடிப்பதன்மூலம் மனித இனத்தின் பொதுவான இயல்பைத் தெரிவிக்கிறார் ஆசிரியர்.

பலவிதப் பாக்களால் அமைத்திருக்கிறார் இக்காவியத்தை. அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், வெண்பா முதலியவற்றைப் படித்துவிட்டு ஆசிரியப் பாவைப் படிக்கும்போது சற்று சுவைக் குறைவு தெரிகிறது. முழுதும் விருத்தத்திலேயே எழுதியிருப்பின் சுவை இன்னும் அதிகமாயிருக்கும் என்று நம்புகிறோம்.

கவியரசர் பாரதிதாசன் அவர்கள் தந்துள்ள மதிப்புரை, நூலை அணி செய்கிறது. பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். கவிதைப் பித்தர்கள் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய நூல் இது. சிறந்த முறையில் எழுதிய ஆசிரியரையும், அழகிய முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ள பாரதிதாசன் பதிப்பகத்தையும் பாராட்டுகிறோம்.

விலை ரூ. 2-4-0

வெளியீடு:
பாரதிதாசன் பதிப்பகம்,
புதுச்சேரி.

★

இல்லற இன்பம்

'இல்லற மல்லது நல்லற மன்று' என்பது அறிஞர்கள் கருத்து. "கூடும் மணமக்கள் கொளத்தக்க நீடு நலம் என்னவெனில் இல்லறத்தைச் செய்தின்பம் எய்துவதாம்" என்று சொல்லியுள்ளார் கவியரசர் பாரதிதாசன். அந்த அடிப்படையிலேதான் தோழர் அருணன் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார்.

இல்லறத்தை நடத்திவரும் பலபேர்கள்கூட அதை இன்பம் என்று சொல்வதில்லை. இன்பமும் துன்பமும் வாழ்வில் இணைந்துதான் வரும். துன்பத்தையும் இன்பமாகக் கருதுபவர்கள்தான் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும் என்பதை விளக்குகிறார் ஆசிரியர். குடும்பத்திலே ஆணோ பெண்ணோ சீறுதலோ, உறுமுதலோ செய்யக்கூடாது. கணவனும் மனைவியும் தங்கள் குழந்தைகளை எவ்வாறு வளர்க்கவேண்டும் என்பதையும், குழந்தைகளின் செயல்கள் எந்த அளவிற்கு மனதுக்குக் குதூகலம் அளிக்கின்றன என்பதையும் இந்நூலில் கூறுகிறார் ஆசிரியர். குழந்தையின் நலத்திற்காக, குழந்தை பிறந்தபின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, கணவன் மனைவியர் தங்கள் உடலுறவை நீக்கவேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். குடும்பத்திலே விருந்துகூட மருந்தாகும் விநோதத்தைக் குறிப்பிட்டுள்ளார். 'சில குறிப்புகள்' என்னும் பகுதியில் உள்ள குறிப்புகள் மிகவும் பயனுள்ளவையாகும்.

வாழ்க்கைக் கலையைச் சரிவரத் தெரிந்துகொள்ள இச்சிறு நூல் பயன்படும்.

விலை ரூ. 1-0-0

வெளியீடு:
அருணோதயம் சென்னை-14.

ஏப்ரல் 12-ம் தேதியன்று எங்கும் கிடைக்கும்!

மதுரைவீரன்

கண்ணதாசன்

— எழுதியது —

—இலக்கியச் சுவையும் வீரச்சுவையும் காதல் நயமும் பின்னிக் கிடக்கும் வசனங்கள்—

—பிழையின்றி அப்படியே தரும் பதிப்பு—

—மேடையில் நடிக்கப் பயன்படும் காட்சி அமைப்பு—

எச்சரிக்கை: போலிப் புத்தக வியாபாரிகள் தப்பும் தவறுமாக அச்சிட்டு, வழக்கம்போல் திருட்டுத்தனமாக விற்பனை செய்வது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க ஏதுவாகும். நண்பர்கள், கீழ்க்காணும் பதிப்பகத்தின் பதிப்பையே வாங்கக் கோருகிறோம்.

பிரதி விலை அணா 8.

வியாபாரிகளுக்கு நல்ல கழிவு தரப்படும்.

வேண்டும் பிரதிகளுக்கு முன்பணத்தோடு எழுதுக:

——— கண்ணதாசன் பதிப்பகம் ———

33, மானகிரி பழனியப்ப செட்டியார் தெரு,
நா. புதூர்,
காரைக்குடி :: இராமநாதபுரம் மாவட்டம்.

திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

12-3-56 திங்கட்கிழமை காலை 9-மணிக்கு திருப்பரங்குன்றம், 'நகர விடுதியில்,' எனக்கும், தோழியர் இராஜம்மாளுக்கும், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் திருமணவிழாவிற்குத் தாங்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்கள்,
ஆர். எம் வீரப்பன்
(எம். ஜி. ஆர். நாடக மன்றம்)

அர்த்தாலுக்குப் பிறகு!

10-3-56 சனி மாலை 5-மணிக்கு

நுங்கம்பாக்கம் ரயிலடிக்கருகிலுள்ள

தி. மு. க. திடலில்

அண்ணா
நெடுஞ்செழியன்
நடராசன்
மதியழகன்
கருணாநிதி
கண்ணதாசன்
கல்யாணசுந்தரம்
ஏ. கோவிந்தசாமி
சி. பி. சிற்றரசு
கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்
சத்தியவாணிமுத்து
அலமேலு அப்பாதுரை
பேசுவர்

★

இன்னிசை: ஜி. கஸ்தூரி—
குடந்தை சீனிவாசன்.

—தி. மு. க, தலைமை நிலையம்—

அடுத்த தொடர்கதை

ஏப்ரல் 17-ம் தேதி இதழில்

ஆரம்பமாகிறது!

★

தோழர் ப. நெடுமாறன் எழுதிய

'தென்பாண்டி வீரன்'

வரலாற்றுப் பின்னணி கொண்டு வரையப்பட்ட சுவைமிக்க நவீனம்.

★

தென்றல் - சென்னை-6.

பன்மொழிப் புலவர், கா. அப்பாதுரை, எம். ஏ. எல். டி.

பதில் தருகிறார்

அ. வேதாசலம், அறந்தாங்கி.

1. *நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங் கொல்லாமை சூழும் நெறி,*

என்னுங் குறளில் இரண்டாவது சீராகிய 'யெனப்படுவ' என்பதிலுள்ள 'காய்க்குமுன் நேர் அசை வருவதற்குப் பதிலாக 'தியாதெனின்' என்னும் நிரையசை வந்துள்ளதே சரியா ?

இலக்கண மேற்கோளுடன் விளக்க வேண்டுகிறேன்.

2. 'கொல்லாமை' என்னுஞ் சொல்லுக்கு நேர்பொருள் என்ன?

3. உயிர்களைக் கொல்லாமையை வள்ளுவர் வற்புறுத்துகிறாரெனின், அக்கருத்து, தமிழர் உணவு முறைக்கு முரணாகுமே ?

1. 'நல்லாறெனப் படுவதியாதெனின்'' என்பதில் மூன்றாம் சீரான ''யாதெனின்'' நேர் அசையுடனே தான் தொடங்குகிறது. அதற்குமுன் ''எனப்படுவது'' என்பதின் கடைசிக் குற்றியலுகரம் 'யகரம் வரக்குறள் உத்திரி இகரமும், அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய'' என்ற நந்நூல் சூத்திரத்தின்படி குற்றயலிகரமே யாகும். அதற்கு எழுத்து என்ற முறையில் மாத்திரை அரை: யாப்பு முறையில் ஒற்றெழுத்துக்களைப் போன்றது. அலகிடப் பெறுவதில்லை. ஆகவே, முதல் அசை நிரை அசை அல்ல. அதற்கு மேற்கோளும் விளக்கமும் தேவையில்லை.

2 ''கொல்லாமை'' என்னும் சொல்லுக்கு இயற்கையான எதிர் மறைப் பொருள், கூடிய மட்டும் எந்த உயிர்களையும் சாகடிக்கவோ, துன்புறுத்தவோ, செய்யாதிருத்தல் என்பது ஆகும். இதன் ஆக்கப் பொருள், கொல்லுவதற்குக் காரணமான செயல்களையும் செய்யாதிருத்தல் (ஊன் உணவு முதலியன), கொலைக்கு உடந்தையாகவோ, கொலை நிகழும் இடத்தில் அதைத் தடுக்காமலோ, உயிர் வாழ்க்கையை வளர்க்காமலோ இருப்பதும் கொல்லாமையின் ஆக்க அறத்துக்கு எதிரானவை என்பது திருவள்ளுவரின் கோட்பாடு. திருவள்ளுவர் கருத்துப்படி ''கொல்லாமை'' என்ற சொல்லின் நேர் பொருள் இவை அனைத்தையும் உட்படுத்தும்.

3. ஊனுணவு உயிர் நூல் முறைப்படி மனித இனத்துக்கு இயல்பானது அல்ல. இன்றைய உலகில் ஊன் உண்பவர் என்று குறிக்கப்படுபவர்தான் மிகப் பெரும்பாலார். ஆயினும் இவர்கள் உண்மையில் ஊன் உண்பவர்களல்ல. ஊனுணவும், செடி, கொடி, உணவும் இயற்கை உணவும் கலந்து உண்ணும் கலப்புணவாரேயாவர். மனிதருள் ஊனுணவு மட்டுமே உண்பவர் எவருமிலர். ஊனுணவு மட்டுமே உண்பதாகக் கொள்ளத் தக்க புலி, கரடி, முதலிய கொடுவிலங்குகளும் இயற்கை உணவாகிய நீர் முதலியன இன்றி வாழமட்டா.

''கொல்லாமை'' என்றவுடன் பலர் ஊனுணவு மட்டுமே கொலை உணவு என்று எண்ணிவிடுகின்றனர். உண்மையில் செடி, கொடி உணவும் கொலை உணவே, ஆயினும் ''கொல்லாமை''யை மேற்கொள்பவன் கூடிய மட்டும் கொலையைக் குறைப்பவன். கொலை தவிர்க்க முடியாத இடத்தில் படிப்படியாகத் தன் குடும்பம், நாடு, இனம், உயிரினம் என்று விரிவுபட்ட கொல்லாமை அறம் மேற்கொள்பவனே யாவன்.

உயிரின வளர்ச்சியில் மனித இனம் நாகரிகமடைந்துள்ளது கொல்லாமையினாலேயே; மனிதன் தேளினத்தைப்போல தன் காதலியை, குழந்தையைத் தின்பதில்லை. மீன் தன் குட்டியைத் தின்பதும் பெரியமீன், சிறியமீனைத் தின்பதும் நாய், பூனை முதலியவை கூட தத்தம் குட்டிகளைத் தின்பதும் மனித இனத்தில் நடக்காத செயலல்ல. டாஸ்மேனியாவில் அத்தகைய மனிதர் இன்றும் உள்ளனர். ஆனால் மனித நாகரிகம் இதைக் கடந்து எவ்வளவோ தொலை சென்றுவிட்டது. உணவுக்காகத் தன் குடும்பத்துக்குள்ளும் கொலை செய்வதில்லை. மொழி, நாடு, ஆகியவற்றுக்குள்ளும் கொலை செய்வதில்லை. மனித இனத்திலேயே எவரையும் கொன்று தின்பதில்லை.

தின்பதற்காக, கொல்லும் இனங்களே கொலை வேள்வியும், பலியும் செய்துவந்தன; வருகின்றன. இவ்வகையில் மனித உணவும், மனிதப் பலியும் நாகரிக உலகில் பழைய செய்திகளாகிவிட்டன. ஊனுணவு விலக்காத இனங்கள்கூட உயிர்ப் பலியைப் பெரும்பாலும் விலக்கி விட்டனர். ஊனுணவும் இன்றியமையாத் தீமையே என்பதை மனித நாகரிகம் உணர்ந்து வருகிறது என்பதற்கு இது ஒரு சான்று. ஏனெனில் மனிதனைத் தின்பவன் மனிதனைப் பலியிடுவது போலவே தான், ஆடு தின்பவர், ஆட்டையும்; பூசணிக்காய் தின்பவர் பூசணிக்காயையும் பலியிட்டு வருகின்றனர் எனலாம்.

திருவள்ளுவருக்கு, தமிழருக்கு, கொல்லாமை ஒரு கட்டுப்பாடல்ல, கண்டிப்பான கொள்கை அல்ல, ஒரு குறிக்கோள் மட்டுமே. கொல்லாதவன் மேலானவன். கொல்கிறவன் தாழ்ந்தவன்; துன்புறுத்தாதவன் மேலானவன். துன்புறுத்துபவன் கீழானவன்; ஆனால் முற்றிலும் கொல்லாதவன் கிடையாது. துன்புறுத்தாதவனும் கிடையாது. ஆகவே, ''கொல்லாமை''யில் எந்த அளவு, எந்தப் படிவரை ஒருவன் முன்னேறியிருக்கிறானோ, அந்த அளவில், அந்தப்படியிலேயே அவன் பண்புடையவனாக, நாகரிகமுடையவனாகத் தமிழரால் கருதப்பட்டான்.

தமிழர் கொல்லாமை நெறிக்கும் புத்தர், சமணர் கொல்லாமை நெறிக்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. (1) கொல்வது பாவம், தின்பது பாபமல்ல என்று இக்கால மேலைச் சமயத்தினர் சிலரும், அக்காலப் புத்தரும் கூறுவதை வள்ளுவர் கண்டித்திருக்கிறார். கொல்ல விரும்பாததை உண்ணாதே என்பதுதான் தமிழர் நீதி. (2) புத்தர் சமணர் ஆரியருக்குச் சிறப்பாக சமணருக்கு ''கொல்லாமை'' ஒரு வெறிக் கோட்பாடு. தமிழரிடையிலேயே பிராமணருக்கும், சைவர் எனப்படும் சாதியினருக்கும் அது ஒரு சாதி அகம்பாவப் பழக்கம். ஆனால், தமிழருக்கு அது கடவுள் போன்ற ஒரு குறிக்கோள். அது பண்பாட்டின் எல்லை அல்லது இலக்கு. வள்ளுவர் கல்வி போன்ற இந்நாளைய உயர் குறிக்கோளைக் கூட மனித இனத்தின் இனப் பொதுஉடமை ஆக்கி, கல்லாதவர் விலங்குகள் என்றார். ஆனால் ''கொல்லாமை''யை இத்தகைய மனித இனப் பொதுஉடமையாகவோ, தமிழினப் பொதுஉடைமையாகவோ, அவர் குறிக்கவில்லை. குறிக்கவும் முடியாது. அது மற்ற இனங்களைத் தாண்டித் தமிழினம் கண்ட ஓர் உயர் குறிக்கோள் மட்டுமே (3) ஆரியருக்கு ஊனுணவு உணவு முறையிலேயே தாழ்ந்த சாதி ஊனுணவு, உயர்ந்த சாதி ஊனுணவு என்று வகுத்தனர். ''கொல்லாமை''யை அடிப்படையாக வகுக்கவில்லை. புத்தர், சமணரும் இடைக்கால இக்கால இந்துக்களும் புண்ணிய பாவம் என்ற பயமுறுத்தலாலேயே ஊனுணவைக் கண்டிக்கின்றனர் நாலடியார் பாடல்கள் இதற்குச் சான்று. ஆனால், தமிழருக்கு ''கொல்லாமை'' அன்பு, அறிவு, ஆகியவற்றின் அடிப்படையான-அதாவது அறம் சார்ந்த ஒரு குறிக்கோள், அல்லது பண்பு. இக்கால அறிவு மொழியில் சொல்லுவதானால் ஆடு வெட்டும் அரிவாள், மனிதனை வெட்டவும் பயன்பெறும். குதிரை முதலிய விலங்குகளை அடிமைப் படுத்துபவன் மனிதனையும் அடிமைப்படுத்தாமலிரான். திருவள்ளுவர் கண்ட இந்த உண்மைகளே நம் காலத்தில் உயிரினக் கொடுமைத் தடுப்புச் சங்க இயக்கத்தின் அடிப்படையாகும்.

தமிழரிடையே ஊன் உண்பவரிருந்தனர் என்றுமிருந்தனர். குடிப்பவரும் இருந்தனர், என்றுமிருந்தனர். ஆனால், திருவள்ளுவர் போன்ற அறிஞர், அருளாளர், பண்பு நிறை சான்றோர் படிப்படியாக மக்களுக்குக் கொல்லாமைப் பண்பின் படிகளை வற்புறுத்தினர். இந்த வற்புறுத்தலைப் பிற இனங்களிலும் காணலாம். ஆனாலும் அவை தமிழரைத் தெரிந்தும், தெரியாமலும் அரைகுறையாகப் பின்பற்றும் முறைகளேயாகும்.

தமிழர் உணவு முறை என்பது ஊனுணவோ, ஊன் உண்ணாமையோ அல்ல. கூடிய மட்டும் கொல்லாமை; ஊறு செய்யாமை, ஈரன்டல் இல்லாமை, அன்பு, ஆகியவற்றைப் பின்பற்றிய நல்லுணவு முறையேயாகும்.

◉

வே. ரா. ராஜு. குருஞ்சாக்குளம்.

1. *''பையரவல்குல்'' என்று மணிமேகலையில் சிறைக்கோட்டம், அறக் கோட்டம் ஆக்கிய காதையில் உதயகுமரன் மணிமேகலையை விளக்குவதால் அது அவனுக்கு எப்படித் தெரிந்தது ?*

2 *மணிமேகலையில் ஆபுத்திரன் தன்னை இகழ்ந்த பார்ப்பனரைப் பார்த்து '' உங்கள் வசிட்டனும், அகத்தியனும், தேவநேமி, திலோத்தமைக்குப் பிறந்தவர்கள்'' என்று கூறுகிறான். இதை விளக்கும் கதை எந்த நூலில் நன்கு தெளிவாக உள்ளது.*

மணிமேகலையில்

''பையரவல்குல் பலர்பசி களையக்
கையிலேந்திய பாத்திரம்
தீப்பியம்''

என்ற கூற்று உதயகுமரன் கூற்றல்ல. உலகவரவி என்ற அம்பலத்தில் தீட்டப்பட்ட ஒரு சித்திரம் கூறிய கூற்று. சித்திரமோ, தெய்வீக ஆற்றல் உடையது. ஆதலினால்தான் பேசியிருக்க வேண்டும். ஆகவே, மணிமேகலை ''பையரவல்குலாள்'' என்பது அதற்கு எப்படித் தெரிந்தது என்ற கேள்வி எழவேயில்லை.

தவிர, அல்குல் என்பதற்கு இந்நாளில் பலர் மறைவிடம் என்று பொருள் கொண்டு கேள்விகள் கேட்டு விடுகின்றனர். அந்தப் பொருளையும் சில சமயம் அது இடக்கரடக்கராகக் குறிப்பதுண்டு. ஆனால் அதன் உண்மைப் பொருள் இடுப்பின் கீழுள்ள அரைப்பகுதி என்பதே. இந்தப் பகுதியிலும் அது பின்புறத்திலுள்ள அழகிய வளைவைக்குறித்ததேயாகும். மனித வடிவில் சித்திரத்தை வரைபவர் கண்ணழகு, மூக்கழகு, ஆகியவற்றின் சிறு அழகுகளைப்போலவே, மார்பு இடை, இடுப்பு முதலிய பேரழகையும் உன்னிப்பாகக் கருதித் தீட்டினர். இந்த வளைவுக்கு நல்ல உவமையாகவே, பாம்பின் படம், தேர்த்தட்டு, முதலியவை குறிக்கப் பட்டன. பின்புற அழகு சில சமயத்தில் முன்புற அழகாகத் தவறாகக் கருதப்பட்டது. சமஸ்கிருதத்திலும் அல்குலுக்குச் சரியான கடீ, நிதம்பம் ஆகிய சொற்களும் இதே பொருளுடையதே.

''பையரவல்குல்'' என்று உதயகுமரனோ, ஆசிரியரோ, கூறியிருந்தாலும் அது கலைஞர் கண்ட இடுப்பழகே அன்றி வேறல்ல.



வெண்பாப் போட்டி

24. தேடிக் கொடுப்பார் திறம்

வெண்பாப் போட்டி 24ன் பரிசு பெற்ற வெண்பாவையும், பிரசுரத்திற்குத் தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ மானம் பெரிதென்பார் மாண்புமிகு செந்தமிழர்;
வானம் சிறிதாகும் வண்புகழார்-மாணிழையே,
கூடிக் கெடுக்கார்; குணமிழக்கார்; என்றுமவர்
தேடிக் கொடுப்பார் திறம்.

—சி. சிதம்பரம், காரைக்குடி

★

ஈழம், இமயமலை எல்லாம்கின் தாள்பணிய
ஆளும் திறமை அழிந்ததுவோ?-தோழாகீ
நாடித் தமிழ்மொழியால் நாடாள யாருனக்குத்
தேடிக் கொடுப்பார் திறம்?

—கோ. கலியபெருமாள், சிதம்பரம்.

★

வல்லமைசேர் பேச்சாலும் வாழு மெழுத்தாலும்
நல்லதாய் நாட்டின் நலங்காக்கத்-தொல்லைகள்
சாடிடினும் தொண்டாற்றும் சற்குணமே நற்புகழ்
தேடிக் கொடுப்பார் திறம்.

—செல்வதாசன், சென்னை-1.

★

கத்துகடல் ஞாலமெலாம் கண்வைத்துத் தேடிடினும்
முத்துகடல் நாடாண்ட மூவேந்தர்-வித்தான
தேன்தமிழர்க் கல்லால் திருமொழியே யார்க்குண்டு
தேடிக் கொடுப்பார் திறம்?

—ந. ஜாபர், தேவத்தூர்.

★

நாடும் அறம்முதலாம் நாலும், நவப்பொருளும்,
வீடும், வினைபொருளும், வித்தைகளும்,-நீடுபுகழ்
ஓடியதும், ஒன்னாரை ஓட்டியதும், ஓய்வின்றித்
தேடிக் கொடுப்பார் திறம்.

—இறையொளியாசான், நாமக்கல்.

★

வரலாற்று ஏடுகளில் வையத்தார் உள்ளத்தில்
கரவாமல் என்ஞான்றும் வாழ்ந்திடுமே-கருதலர்
சாடி மொழிகாக்கத் தன்தலையைப் போர்க்களத்
தேடிக் கொடுப்பார் திறம்.

—மு. சு. மணி, குரூர்.

★

துன்பம் விளையின் துணைநிற்பார் தோழமைபூண்
டின்பம் பெருக்கி இடர்துடைப்பார்-மன்பதையில்
மூடி மறைக்க முயன்றாலும் ஒன்றாது
தேடிக் கொடுப்பார் திறம்.

—கோ. நம்மாழ்வார், இளங்காடு.

★

நாடித் தொழில்செய்வார் நற்பொருளை ஈட்டிடுவார்
கூடித் தினமுண்பார் கூட்டமொடு-ஈடின்றிப்
பாடிக்கேட் பார்கள் பசிதீர்ப்பார் பாரிலென்றும்
தேடிக் கொடுப்பார் திறம்.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

★

செந்தமிழைக் காத்தல்; சிதையா அறம்வளர்த்தல்;
நந்தமிழர் வாழுவகை நண்ணிடுதல்;-இந்திமொழி
ஓடி மறைய உதைகொடுத்தல்; இந்நான்கும்
தேடிக் கொடுப்பார் திறம்.

—எஸ். கல்யாணசுந்தரன், சிதம்பரம்.

ஆண்டவன் சக்தியால் ஆகாத காரியத்தைத்
தூண்டும் முயற்சியால் தோற்றுவிக்கக்-காண்கின்றீர்
தேடி உழைக்காத தெய்வத்தை வெல்லுமே
தேடிக் கொடுப்பார் திறம்!

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

★

கடமையொடு கண்ணியம் கட்டுப்பா டென்ற
திடமுடைய பாதை தெளிந்தே-இடர்வரினும்
நாடிப் பணிபுரிதல் நாட்டின் உரிமைதனைத்
தேடிக் கொடுப்பார் திறம்.

—தமிழ்நெஞ்சன், கரந்தை.

★

வைக்கத்து மாவீரர் வாழ்காஞ்சி அண்ணாவும்
ஊக்கம்கொண் டேயுழைப்பர் உத்தமியே!-மேற்கொண்டிந்
நாடும் நமதாக்கி நம்வாழ்வும் சீரடையத்
தேடிக் கொடுப்பார் திறம்.

—பி. ஆர். சின்னகிருஷ்ணசாமி, அப்பியாபாளையம்.

★

இன்பத் தமிழுணர்கே என்னருமைத் தாய்மொழியே
துன்பப் புயல்மாலும் சோராதே-மன்பதையில்
ஓடிப் புகழ்சேர உன்னறிவுச் செல்வங்கள்
தேடிக் கொடுப்பார் திறம்.

—ந, பொன்னுசாமி, இடையர்பாளையம்.

★

தன்னிலையை நன்றிலையிற் செப்பனிட எண்ணாது
தண்ணளியை மன்னுயிர்க்குத் தந்துதவும்-தண்மதிபோல்
வாடிக் கிடந்தாலும் செந்தமிழர் வாழுயிர்க்குத்
தேடிக் கொடுப்பார் திறம்.

—அருகு. கந்தன், பாகனேரி.

★

ஆக்கம் அளித்தலொன்று, அன்பு விதைவிதைத்து
ஊக்கங் கொடுக்கும் உரையிரண்டு-மாக்கடல்போல்
கூடித் தமிழ்காக்குங் கூட்டுறவு மூன்றுகும்
தேடிக் கொடுப்பார் திறம்.

—ப. கணபதி, சோழபுரம்.

★

ஆவிகளம் சென்றே யழிந்தாலும், "பீர்மேடு,
தேவிகுளம், சித்தூர் திருத்தணி"யைக்-கூவியெழுந்
தோடிப் பிடிப்பதுவே ஓங்கு தமிழ்க்கொடியைத்
தேடிக் கொடுப்பார் திறம்!

—எம். சுப்பையா, நாரைக்கிணறு.

★

பொய்யாப் புகழ்சூடிப் போந்தே ஒளிவீசிச்
செய்ய நலஞ்செய்யும் செந்தமிழன்-மெய்யோடு
கூடிப் பிறந்த குலப்பண்பே யாகுமாம்
தேடிக் கொடுப்பார் திறம்.

—புரட்சிவேலன், கோர்பெட்டா.

★

கன்னித் தமிழ்ப்பெயராள்; கன்னற் சுவையுடையாள்
என்றுங் குலையா எழிலுடையாள்-தன்னிடத்தே
கோடி நலமிருக்கக் கொல்லைவழி இந்திக்கார்
தேடிக் கொடுப்பார் திறம்?

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

நின்று பயனுதவும் நீராழி வெண்முகிற்குச்
சென்றுதவும் நன்மாரி சேல்விழியே!-நன்றாய்மின்
நாடி இரப்போர்க்கு நல்குதலின் கோடியுறும்
தேடிக் கொடுப்பார் திறம்.

—அ. கிருஷ்ணன், சரவணபட்டி

★

காட்டினில் மூண்டிட்ட நற்படையில் செந்தமிழர்
தேட்ட முடன்திரண்டு தாக்கிடவே-நாட்டமுடன்
கூடிக் குலவியே கொஞ்சுமொழிக் கன்னியர்கள்
தேடிக் கொடுப்பார் திறம்.

—இரா. இளங்கவி, கண்டரகோட்டை.

★

கொற்றம் இழந்ததனால் கூம்பு தமிழகமே!
உற்றோம் விழிப்பு; உறுபகை-அற்றிடவே
சாடுவோம் காண்க தலைநிமிர்ந்தே வெற்றியினைத்
தேடிக் கொடுப்பார் திறம்.

—கு. இரமாதேவி, சென்னை-1

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு